www.padippakam.com

# நங்கையரின் அணிகலன்கள்

யாழ்ப்பாணப் பாரம்பரியம் பற்றிய நுண்கலை ஆய்வு



செ. கிருஷ்ணராசா M.A.
சி. ஜெயானந்தி M.A.

படிப்பகம்

www.padippakam.com


| | |
|---|---|
| Title | : The Traditional Ornaments of Women in the Jaffna Peninsula |
| Authors | : S. Krishnrajah., M.A.<br>S. Jeyananthi., M.A. |
| Subject | : Fine Arts |
| Publication | : Pirainila Veliyeedu ,Kondavil-Eest |
| First Published | : December, 1997 |
| Copy Rights | : For Authors |
| Cover Design & Printing | : Kaarthigeyan (p.v)Ltd. Colombo-6 |
| Book Printing | : St. Joseph's Catholic press, Jaffna |
| Book Size & Paper | : ¼ Crown size, 70g |
| Catalogue No | : 709.95489 |
| Price | : 200/- |

| | |
|---|---|
| தலைப்பு | : நங்கையரின் அணிகலன்கள் |
| ஆசிரியர்கள் | : செ. கிருஷ்ணராசா.,M.A.<br>சி. ஜெயானந்தி.,M.A. |
| பொருட்பிரிவு | : நுண்கலை |
| வெளியீடு | : பிறைநிலா வெளியீடு, கோண்டாவில் மேற்கு. |
| முதற்பதிவு | : டிசெம்பர், 1997 |
| பதிப்புரிமை | : ஆசிரியர்களுக்கே |
| முன் அட்டை பதிவு | : கார்த்திகேயன் பிறைவேற்லிமிடெட்,கொழும்பு-6 |
| நூல் அச்சுப் பதிவு | : யாழ். புனிதவளன் கத்தோலிக்க அச்சகம் |
| நூல் அளவு தாள் | : 1\4 Crown size, 70g |
| நூல் பகுப்பாக்க இல. | : 709.95489 |
| விலை | : 200/- |


படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்


அணிந்துரை

நுழைவாயில்

அத்தியாயம் ஒன்று : ஆய்விற்கோர் அறிமுகம்

அத்தியாயம் இரண்டு : இலங்கையில் பெண்கள் அணியும் அணிகலன்களும் அவை பற்றிய விளக்கமும்

அத்தியாயம் மூன்று : யாழ்ப்பாணத்து சமூக அமைப்பில் பெண்களின் அணிகலன்கள்

அத்தியாயம் நான்கு : யாழ்ப்பாணக் குடாநாட்டில் பொற்றொழிலாளர்

அத்தியாயம் ஐந்து : பெண்களின் அணிகலன்களும் நம்பிக்கைகள்-மரபுகளும்

முடிவுரை

உசாத்துணை நூல்கள்

பின்னிணைப்பு

- அகர வரிசையில் அணிகலன்கள்
- தமிழ்ப் பழமொழிகளில் அணிகலன்கள்
- அணிகலன்களின் வரைபடங்கள்


படிப்பகம்

www.padippakam.com

# அணிந்துரை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெண்கள் பாரம்பரியமாக அணியும் அணிகலன்கள் பற்றிய நூல் ஒன்றிற்கு அணிந்துரை வழங்குவதில் நான் மிகவும் பெருமை அடைகிறேன். *பெண்ணின் கோணல் பொன்னால் நிமிரும்* என்ற பழமொழியும் இன்னும் எமது காதுகளில் விழத்தான் செய்கிறது. பெண் என்று பிறந்துவிட்டால் அவள் பண்பாடு காக்க வந்துவிட்டாள் என்று எண்ணி மகிழும் காலம் இன்னமும் வரவில்லை. ஆனால் இந் நூலின் மூலம் பெண்களின் அணிகலன்கள் பற்றிய தகவல்களை நுண்கலை நோக்கிலே தர முற்பட்டமை, பண்பாட்டுப் பேணலில் பெண்களின் பங்களிப்பினை ஒரு வகையில் ஆவணப்படுத்துவதாக அமையும் முயற்சி என்றே கூறவேண்டும்.

நங்கையரின் அணிகலன்கள் பற்றிக் கிடைக்கும் செய்திகளை வரலாற்றுநோக்கிலும் நுண்கலை நோக்கிலும் நூல் ஆசிரியர்கள் இயன்றவரையிலும் தொகுத்துத் தந்துள்ளனர். இந் நூலின் அமைப்பும் ஆய்வுத்தரவு நிலையிலே அணிகலன்கள் பற்றிய செய்திகளைத் தேடி வருபவற்கு நல்லதொரு நுழைவாயிலைக் காட்டுகிறது. தமிழர் மரபாக அணிந்த அணிகலன்களிலே பெண்களுக்குரிய அணிகலன்களைப் பாகுபாடு செய்வது எப்படி என்ற கேள்வியும் இன்று கேட்கப்படுகிறது. குறிப்பாக மேலைநாட்டவர் தமிழ்ப் பெண்களின் மரபான அணிகலன்கள் என்று நாம் கருதி வந்தவற்றை இன்று மாற்றும் முயற்சியிலீடு பட்டுள்ளனர். காற்சிலம்பு, காதணி, மூக்குத்தி எனப் பெண்களின் அணிகலன்களாக இலக் கியப் பாடல்கள் காட்டியவற்றை மேலைத்தேச ஆடவர்களின் மேனியிலே காணும்போது நாம் நகைக்கின்றோம். ஆனால் அவர்கள் எங்களை எள்ளி நகையாடுகிறார்கள். அழகு படுத்தும் பொருட்கள் என்ற நிலையிலே ஆண் பெண் என்ற பாகுபாடு தேவையில்லை என்பதே அவர்கள் அணிகலன்கள் பற்றி எமக்குத்தர முற்படும் விளக்கமாகும். எனினும் அவற்றை நாம் ஆண்களின் அணிகலன்கள் என்று கொள்வதற்கு எமது மரபு என்னும் கட்டுப்பாடு தடுக்கிறது.

இந்நிலையிலே நம்மவருடைய அணிகலன்கள் பற்றிய நம்பிக்கைகளையும் மரபுகளையும் எடுத்துக்காட்டி விளக்கம் தரும் இந் நூல் மேலைத்தேயத்தவரையும் சிந்திக்க வைக்கும் என்பதில் ஐயமில்லை. இன்னும் நூலில் இணைக்கப்பட்டுள்ள நங்கையரின் அணிகலன்கள் பற்றிய படங்கள் அவற்றின் உண்மையான உருவங்களையும் பயன்பாட்டையும் காட்டி நிற்கும். இதனால் அரும்பொருளகங்கள் இல்லாமலே அசலையும் நகலையும் அறிய ஒரு

படிப்பகம்

www.padippakam.com

வாய்ப்பும் இந்நூல் வழியாக எல்லோருக்கும் கிடைக்கும். *யாழ்ப்பாணக் குடாநாட்டின் பண்பாட்டு நிலை அதன் வாழ்வியல் நடைமுறைகளிலே பதிவு செய்யப்பட்டுள்ளது* என்ற உண்மையை இன்று உலகம் அறியச் செய்யவேண்டும். அதற்காக இத்தகைய நூல்கள் பல வெளிவர வேண்டும். தமிழரது ஆடை, அணிகள் பற்றிய செய்தித் தொகுப்பு முயற்சிகள் முன்னரும் நடைபெற்றுள்ளன. ஆனால் இந்நூல் சிறப்பாக யாழ்ப்பாணத்து மரபு பற்றிய செய்திகளைக் கூறுகிறது. நம்மவர் முற்காலங்களில் எமது வாழ்வியல் பற்றிய செய்திகளை ஆவணப்படுத்த மறந்தமையால் பல செய்திகள் காலத்தோடு மறைந்துவிட்டன. எனினும் இப்போது இந்நூலின் வெளியீடு எல்லோரும் மறந்ததை மீண்டும் ஒருமுறை நினைக்கவும் பதிவுசெய்யவும் தூண்டும். ஆய்வு, வாழ்வியலோடும் நன்கு தொடர்புபட்டிருப்பதை நூல் ஆசிரியர்கள் செம்மையாக எடுத்துகாட்டியுள்ளனர். இவர்களின் பணி தலைமுறை மரபு காக்கும் பணியாக அடுத்த தலைமுறைக்கும் அதனை உணர்த்தும் பணியாக அமைகிறது.

21ம் நூற்றாண்டின் ஆய்வுக்கான அடிநிலைத்தகவல்களைக் கொடுக்கும் நிலையிலே பல நூல்கள் எழுதவேண்டியுள்ளன. அவை பெருவெள்ளம் போலத்தோன்றும் வேளையில் இது ஒரு சிறுதுளி. ஆனால் காலத்தின் தேவையை அறிந்து செய்யும் பணியாக இந்நூல் வெளிவருகிறது. இன்னும் பலரை இப்பொருள் பற்றி மீண்டும் எண்ணிப்பார்த்து தகவல் களைத்தர தூண்டுகிறது. நூலை இயற்றிய இருவரும் பாராட்டப்படவேண்டியவர்கள். பண்பாட்டு ஆய்வுக்குப் பணிசெய்ய முன்வந்தவர்கள். இவர்கள் முயற்சி இறையருளால் இன்னும் வளரும். இத்துறையிலே அவர்கள் உன்னதமான வளர்ச்சிபெற என் வாழ்த்துக் களும் ஆசிகளும்.

*கற்றது கைம்மண் அளவு*

கலாநிதி. மனோன்மணி சண்முகதாஸ்
வரவு ஆய்வாளர். மொழியியல் நிறுவனம், கக்குசுயின் பல்கலைக்கழகம், யப்பான்.
வரவு விரிவுரையாளர், தமிழ்த்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

09. 12. 97

படிப்பகம்

www.padippakam.com

# நுழைவாயில்

எம்மங்கையர் பூண்டு சிறப்பித்த அணி கலன்களினூடே தமிழ்ப் பண்பாட்டின் மாட்சி காலந்தோறும் திரை கடந்து வளர்ந்து சென்று உலகெலாம் வியா பித்து, பரந்த பண்பாட்டில் கலந்து நிற் கின்றது. தமிழ்மொழியின் மாட்சி அதன் செழிப்பான இலக்கிய வளத்தில் இருந் தும் செதுக்கிய சிலைகளில் இருந்தும் பிரவாகிப்பது போல் இப் பிராந்தியத்தில் வேறெம் மொழிக்கும் அத் தனித்துவம் கிடைத்திருக்கவில்லை. தென்குமரி தென் மொழிக்கு வளையாபதி, குண்டலகேசி, சூடாமணி, மணிமேகலை, சிலப்பதி காரம் என வளர்ந்து செல்லும் அணிகலன் களை பூணவைத்து சிறப்பித்த புரவலர் கள் இயல்–இசை–நாடகம் வடிவில் அவற்றின் அலங்கார ரசனையை வெளிப் படுத்தியும் உள்ளார்கள். சிலப்பதிகாரம் என்ற காவியமரபொன்றிலேயே அவ் அலங் காரங்களைக் கண்டுகளிக்கும் வாய்ப்பு எமக்குக் கிடைத்துள்ளது. சிலம்பின் மாண்பில் தமிழின் அணிகலன்கள் உரு வான மரபின் தொடர்ச்சியாகவே மேகலை யும் வளையும் குண்டலமும் எமது மங்கையரின் மாண்புறு அணிகலமாயிற்று. அம்மாண்பில் செதுக்கிய சிலையென உருவான பரதத்திலே அணிகலன்கள் ரசனைக்கு சுருதி சேர்க்கும் அலங்கார அவையங்களாயிற்று. பல்லவ மரபிலும் சோழ–பாண்டிய மரபிலும் பரதம் பாவிய வகையிலும் அதன் ஓவிய வகையிலும் ஆபரணங்களின் செழிப்பு துலக்கமாக வும்–நுணுக்கமாகவும் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. நாகதுவீபம் என அழைக் கப்பட்ட நாடான யாழ்ப்பாணத் தீபகற்பத் திலும் அதன் தனித்துவம் நிலைத் திருந்தது.

நாகதுவீப நாடான மணிபல்லவத்திலும் (பல்லவர்காலம்) மும்முடிச் சோழமண் டலமான ஈழத்திலும் (சோழர்காலம்)

படிப்பகம்

www.padippakam.com

பண்பாட்டுத் தனித்துவத்தினைத் தாங்கிய வகையில் உருவாக்கி எமக்குக் கொடுக்கப்பட்ட அணிகலன்களும் பிற சான்றுகளும் இன்று எமக்கு கிடைத்தில. காலத்தின் கோலத்தால் அழிந்த வைபோக எஞ்சியுள்ளவற்றையும் அவற்றின் பண்பாட்டுப் பெறுமதி உணரப்படாது பணப் பெறுமதி கருதி உருவழிக்கப்பட்டு விட்டன. யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் கந்தரோடை என்ற மையத்தில், கிணறு ஒன்று வெட்டப்பட்டுக் கொண்டிருக்கையில் பெற்றுக் கொள்ளப்பட்ட தங்கத்தாலும்–நவரத்தின இழையங்களாலும் உருவாக்கப்பட்டிருந்த புராதன ஆபரணம் ஒன்று பணப்பெறுமதி கருதி சுன்னாகத்திலுள்ள பொற்கொல்லரிடம் விற்பனை செய்யப்பட்டுவிட்ட நிகழ்வு மேலே கூறப்பட்ட அக்கருத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டு.

குடாநாட்டின் மேற்கே வேலணையில் வேரப்பிட்டி என்ற மையத்தில் கற்குவாறி ஒன்றில் கல்லுடைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது கண்டுபிடிக்கப்பட்ட சோழர் காலத்து தங்க அணிகலன் தொகுதி ஒன்று பாதுகாக்கப்பட்டு யாழ்ப்பாண அரும் பொருளகத்தில் வைக்கப்பட்டிருந்தது. அத்தொகுதி பின்னர் கொழும்பிலுள்ள அரும் பொருளகத்திற்கு மாற்றப்பட்டுவிட்டது. அந்த ஆபரணத்தொகுதியில் கஜலக்குமியைத் தாங்கிய பதக்கமும் சங்கிலியுமே நுண்கலை ஆய்வில் சிறப்பிடத்தினைப் பெறுகின்றது. பதக்கத்திலிருந்து கீழே தொங்கும் தங்கமணிக் குஞ்சங்கள் விஜயாலயன் காலத்து தஞ்சை நிசும்பசூதனி அம்மனின் அணிகலனை பெரிதும் ஒத்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நாகதீபம் என்றும் மணிபல்லவம் என்றும் அணிகலன் அடியாக உருவான அப்பெயர்கள் இத்தீபகற்பத்தின் சிறப்பினை பல நிலைகளிலும் வெளிப்படுத்தி நிற்கின்றன என்றே குறிப்பிட வேண்டும். ஈழம் பூட்சி என்ற சோழரது சாசனச் சொல்வழக்கு பொன்வரி என்று கருதப் படுகின்றது. ஈழம் = இலங்குதல் என்ற பொருளில் முத்து–இரத்தினம்–மணிகள் நிறைந்த நாடு என (இலங்கை) வழங்கப் பட்டுவந்தது. அணிகலன்கள் நிறைந்த இந்நாட்டிற்குத் தீபமாக, மணி–முத்தாரமாக மணிபல்லவமான யாழ்ப்பாணக்குடா நாடு சிறப்புற்றிருந்ததில் வியப்பேதும் இருக்க முடியாது. நைனா(ர்) தீவில் நாகரத்தினம் கொண்ட அம்மனின் தலையலங்காரம் நைல்நதி வழிப் பண்பாட்டினூடே மணிபல்லவப் பண்பாடு கலந்து உறவுகொண்டிருந்தது என்பதற்கொரு சான்று.

காயகல்பமும் காவியுடையும் தரித்த மணிமேகலை மரபுடனும் தொடர்புபட்டு தனித்துவமான ஒரு பண்பாட்டை வளர்த்தெடுத்த ஒரு பிராந்தியம் என்ற வகையில் யாழ்ப்பாணக் குடாநாடு தென்னாசியாவில் ஒரு பண்பாட்டு அலகாக தனித்துவம் பெறவாய்ப்பாயிற்று. அச்சிறப்பின் தொடர்ச்சியாக இப் பிராந்தியத்துப் பெண்கள் அணிந்து, சிறப்பிக்கும், பண்பாட்டின் இவ் அணிகலன்கள் பற்றி விளக்கும் இச்சிறு ஆய்வுநூல் பழமைக்கும் புதுமைக்கும் இடையே காணப்படும் நுண்கலையம்சங்களை வெளிப்படுத்தி நிற்கின்றது. இந்நூலுக்கான ஆரம்ப ஆய்வு முயற்சிகள் 1990ம் ஆண்டிற்குப்பின் தொடங்கப்பட்டு முன்னெடுத்துச் செல்லப்பட்டது. இவ் ஆசிரியர்கள்

படிப்பகம்

www.padippakam.com

இருவரும் இணைந்து நேரடியாக கள ஆய்வுகளில் ஈடுபட்டதனூடாகவே தகவல் கள் சேகரிக்கப்பட்டன. பெருமளவிலான வர்ணப் புகைப்படங்கள் எம்மால் எடுக்கப் பட்டன. நூலின் அட்டைப் படத்தினை அலங்கரிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட மோறா கிழக்கும் மேற்கும் பண்பாட்டு அடிப்படையில் சங்கமிக்கின்ற வடிவமாக திகழ்கின்றமையின் பின்னணியில் அவற் றின் முக்கியத்துவம் உணரப்பட்டுத் தெரிவு செய்யப்பட்டது. வர்ணப் புகைப் படங்கள் எல்லாவற்றிலும் புகைப்படப் பிரதியாக அச்சிடுவதில் உள்ள சிக்கல் காரணமாக அவையாவும் கோட்டு வரை பட முறையில் அச்சேற்றப்பட்டுள்ளன.

இந்நூலின் அத்தியாயப் பகுப்பு, அமைப்பு முறை தொடர்பாகவும், கருத்துநிலை-தெளிவு தொடர்பாகவும் ஏற்ற ஆலோச னைகளை அனுகியமாத்திரத்திலே எமக்கு வழங்கி, இந்நூலினை சிறப்புற வெளிக் கொணர்வதற்கு ஏற்ற மனத்திடத்தினை எமக்கு ஏற்படுத்தியவர் என்ற வகையில் கலாநிதி திருமதி மனோன்மணி சண்முக தாஸ் அவர்களுக்கு (ஆய்வாளர், கக்கு சுயின் பல்கலைக்கழகம், யப்பான்) எமது மனமுவந்த நன்றியறிதல்கள். எமது நண் பனும் நுண்கலைத் துறைசார் விரிவுரை யாளருமான T. சனாதனனின் அறிவுறுத் தல்கள் இந் நூலாக்க கருத்தமைவிற்குப் பெரிதும் உதவியிருந்தது. அவரது வள மூட்டலுக்கும் எம் நன்றிகள் .

மேலும் இந்நூலை கணனிமுறையில் அச் சிடுவதற்கு சிறப்பான அதன் கட்டமைப் பிற்கும் காரண கர்த்தராக விளங்கிய அருட்திரு கலாநிதி மத்தாயஸ் அவர்கட் கும், யாழ்ப்பாணம் புனித வளன் கத் தோலிக்க அச்சக கணனிப்பிரிவில் கடமை யாற்றும் சகோதரிகட்கும் ஆசிரியர்களு டைய நன்றியறிதல்.

இறுதியில் வாசகர்களாகிய உங்களுடனும் ஓர் அன்பான வேண்டுகோள்: இந்நூல் எம்மிருவரதும் தனித்துவமான ஆய்வின் பயனாக உருவாக்கப்பட்டதாகும். இக் குடாநாட்டின் பலபக்க பண்பாட்டு அம்சங் களையும் வெளிக்கொணர வேண்டும் என்ற ஓர் உந்துதலின் முதற் செயற் பாடாக இவ் வெளியீடு பிறைநிலா வெளி யீடாக வெளிக்கொணரப்படுகிறது. கல்வி சார்நிலையில் வாசகர்களாகிய உங்களது கருத்துக்கள் - என்றுமே வரவேற்கப்படு கின்றன. பக்கச்சார்பற்ற உங்கள் கருத் துக்களை இந்நூலின் இரண்டாம் பதிப் பில் இணைத்து வெளியிடுவதற்கு ஆசிரி யர் இருவரும் சித்தம் கொண்டுள்ளனர். இனி உங்கள் சித்தத்தினை நூலினுள் நுழைக்கலாம்.

**நன்றி**

செ. கிருஷ்ணராஜா
சி. ஜெயானந்தி

*1997-12-10*
கோண்டாவில்-மேற்கு

படிப்பகம்

www.padippakam.com

அத்தியாயம் மூன்று

## ஆய்வுக்கோர் அறிமுகம்

ஆபரணக்கலைக்கும் அரிவையருக்கும் இடையிலான தொடர்பு பிறப்புரிமை போன்றது. நீண்டகாலப் பழமையையும் வரன்முறை வரலாற்றையும் கொண்டது. அதன் பின்னணியில் அழகியலையும் அடிப்படையாகக் கொண்டது. ஆபரணங்கள் பற்றிய வரலாறானது வெறுமனே நுண்கலை வரலாறாக மட்டும் அமையாது, ஒரு சமூக வரலாறாகவும் அமையும். அல்லது அதன் உபயோகத்தின் அடிப்படையில் ஒருவேளை அது சமயவரலாறாகவும் அமையலாம். ஏனெனில் தென்னாசியாவைப் பொறுத்தவரையில் அன்றும் இன்றும் கோயில்களே ஆபரணக்கலையின் பிறப்பிடமாகவும் அதே நேரத்தில் ஆபரணக்களஞ்சியமாகவும் விளங்கின என்பதனாலாகும். ஆனால் இன்று அழகுசாதனப் பொருட்கள் என்ற வரிசையில் தங்க ஆபரணங்களும் பிற அணிகலன்களும் வியாபாரப் பொருட்களாகிவிட்டன.

அணிகலன் என்ற பதமானது அணி என்ற வினையடியாகத் தோன்றி கலன் என்ற விகுதியுடன் நின்று ஆபரணம் என்ற பொருளைச்சுட்டுகின்றது. தமிழ் லெக்சிகனில் அணிகலன் என்பதற்கு விளக்கம் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது: அணி = ஒப்பனை, அழகு, ஆபரணம், முகம், பெருமை, படை, வகுப்பு என பலபொருள்தரும். அணிகலம் என்ற பதத்திற்கும் ஆபரணம் என்றபொருளே கொடுக்கப்பட்டுள்ளது. எனவே அணிகலம் என்ற பதமானது அணியும் கலங்களால் ஆபரணம்



படிப்பகம்

www.padippakam.com

ஆமிற்று. அலங்காரப்படுத்தும் நோக்குடன் அணிகலம் ஆபரணமாமிற்று எனலாம்.)

நாகதுவீப நங்கையரின் அணிகலன்கள் பற்றிய நுண்கலை நின்ற இவ் ஆய்வில் ஆபரணக் கலைமின் தோற்றம், அதன் வளர்ச்சி, பரவல், அக்கலையின் பின்னணியில் அமைந்திருந்த சமூக, சமய, பொருளாதார முக்கியத்துவம் பற்றி நோக்குவது பயனுடையதாக அமையும். இப்பின்னணியிலே நாகதுவீபம் எனப்படும் யாழ்ப்பாணத்தில் பெண்கள் அணியும் ஆபரணங்கள் பற்றிய கலை வனப்பினை எடுத்துக் காட்டுவது இரண்டு வகையில் இங்கு உபயோகமானதாக அமையும். அவை யாவன :

1. புராதன நாக துவீபமான யாழ்ப்பாணத்துத் தீபகற்பத்தில் பாரம்பரிய கலை மரபுகள் காலஓட்டத்தினால் அள்ளுண்டு மறைந்து போகக் கூடிய ஒரு அபாய நிலை தோன்றியுள்ளது என்பதனாலும்
2. இப்பிரதேசத்தில் காலாதிகாலமாக பின்பற்றி வரப்பட்டிருக்கக்கூடிய ஆபரணக் கலை தொடர்பான தொழில்நுட்ப முறையின் தன்மைகளையும் சிறப்பியல்புகளையும் வெளிப்படுத்துமுகமாகவும் இச்சிறிய ஆய்வுத் தொகுப்பினை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இவ்விரு நோக்கங்களின் பின்னணியில் நாகதுவீபம் உள்ளடக்கிய நிலத்தினைத் தழுவிய பழமைமிக்க இச்சமூகத்திற்கும் அதனோடு தொடர்புபட்டிருக்கக்கூடிய பிற சமூகங்களிற்கிடையிலான தொடர்புகளையும் உற்றுநோக்க முடியும். குறிப்பாக யாழ்ப்பாணத் தீபகற்பகத்திலே வாழுகின்ற தமிழ் மக்களுடைய வழித்தோன்றல்களை பெருமளவிற்கு தென்னிந்தியாவின் மேற்குக் கரையிலே வாழுகின்ற மலபார் சமூகத்தவருடன் M.D. இராகவன் முதல் பேராசிரியர் சிவத்தம்பி வரையிலான ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டுவர். யாழ்ப்பாணச் சமூகத்தவரிற்கும் கேரள மாநிலத்திலுள்ள மலபார் சமூகத்தவரிற்கும் இடையிலான பண்பாட்டுத் தொடர்பு பற்றி இதுவரையிலும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவிற்கு பண்பாட்டு ரீதியிலான ஆய்வுகள் எதுவும் ஒப்பியல் அடிப்படையில் இடம் பெறவில்லை. இதன் காரணமாக இவ்விருசமூகங்களிற்கும் இடையே இருந்திருக்க முடிந்த கலாச்சார ஒற்றுமைகளை இனம்காண முடியாது போயிற்று. ஆதலால் யாழ்ப்பாணத் தமிழரின் ஆபரணக்கலை பற்றிய இச்சிறு ஆய்வின்கண் மலபார் மக்கள் அணியும் ஆபரணங்களுடன் காணப்படும் நெருக்கமான—ஒத்த தன்மைகளையும் தொழில் நுட்பமுறைகளையும் எடுத்துக்காட்டுவது முக்கியமான ஒரு நோக்கமாகவும் அமைகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

யாழ்ப்பாணத் தமிழர்களுக்கெனத் தனித்துவமான கலைமரபுகள் எவையும் இருந்ததா என்பதனையிட்டு இன்னும் தெளிவற்ற ஒரு தன்மையே காணப்படுகின்றது. தென் இலங்கையில் வாழும் சிங்களமொழி பேசும் மக்கள் மத்தியில் பாரம்பரியமாக நிலவிவரும் ஒருசில கலைமரபின் சில அம்சங்களை யாழ்ப்பாண சமூகத்தினர் மத்தியில் அவதானிக்க முடிகின்ற அதே நேரத்தில் தென்னிந்தியாவில் தமிழ்நாடு, கேரளம், போன்ற பிரதேச செல்வாக்குகளும் நிலவிவருவதனை பல நிலைகளில் வைத்து காணமுடிகின்றது. யாழ்ப்பாண மக்கள் பின்பற்றிவருகின்ற வாழ்க்கைமுறையின் பல அம்சங்களை எடுத்து நோக்கின் இத் தீவிற்கு வெளியே தமிழகமக்கள் பின்பற்றுகின்ற வாழ்வு முறைகளிலும் பார்க்க கேரள மக்கள் சிறப்பாக பாலக்காட்டில் வாழுகின்ற கேரள மக்களின் பல பண்புகளை உள்ளடக்கியதாக அமைந்திருப்பதனைக் காணலாம். மொழியியல் அடிப்படையில் இருந்து வழிபாடு வரையிலான பலவழிகளில் கேரளாவில் உள்ள பாலக்காட்டு மக்களை ஒத்தவராக யாழ்ப்பாண சமூகத்தவர் காணப்படுவது முக்கியமான ஓர் அம்சமாகும். இந்நிலையில் ஆபரணக் கலை தொடர்பாக யாழ்ப்பாணத் தமிழர்கள் கொண்டிருக்கின்ற கலைரீதியானதும், சிறப்புத் தேர்ச்சிக்குரியதுமான பல அம்சங்களை கேரளமக்களுடன் ஒப்பிட்டு நோக்கமுடிகின்றது. இதற்கு முக்கியமான ஒரு வரலாற்றுக் காரணியானது கேரள மக்கள் தென் இந்தியாவிலும் இலங்கையிலும் நகை உற்பத்தித் தொழிலில் அல்லது நகை அடைவு பிடிக்கும் வர்த்தக தொழிலிலும் நெடுங்காலமாக ஈடுபட்டு வந்திருந்தமையாகும்.

நாகதுவீபத்து மக்கள் என்று குறிப்பிடும்போது இந்த ஆய்வில் வரலாற்று அடிப்படையில் அல்லது பெருமளவிற்கு சமயத்ததைப் பகைப்புலமாகக் கொண்டே இப்பிரச்சினை பற்றி நோக்கப்படுகின்றது. ஏனெனில் மரபுவாய்ந்த ஆபரணக்கலையில் பெருமளவிற்கு சமயத்தின் செல்வாக்கு முக்கிய காரணியாக அமைந்து காணப்படுகின்றது. மிகக்கூடுதலான ஆபரணங்கள் மக்களுக்காக அன்றி கோயில்களிலே எழுந்தருளியிருக்கும் தெய்வங்களின் தேவைகளிற்காக பயன்படுத்தப்படுகின்றன. இதே போன்று நாகதுவீபத்து நங்கையரின் ஆபரணங்களின் பின்னணியில் மதம் செல்வாக்கு செலுத்துவதனைக் காணலாம். ஆனாலும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஆபரணக்கலையின் கலை நுட்பத்திலும், தரத்திலும் வேறுபாட்டை ஏற்படுத்தி நிற்கின்றது. இதனூடாக சமூக வேறுபாட்டையும் இங்கு காணமுடியும் என்பது வெளிப்படையே.

நாகதுவீபத்து நங்கையர் அணியும் ஆபரணங்கள் பற்றிய இச்சிறு ஆய்வின்கண் நுண்கலை நின்ற நோக்கில் ஆபரண வகைகள், அவை அணியப் பெற்ற காலம், அவ் ஆபரணங்கள் கொண்டுள்ள கலைவனப்பு, தொழில்



படிப்பகம்

www.padippakam.com

நுட்பம் போன்ற விடயங்களை ஆராய்வதும் இங்கு முக்கிய நோக்கமாக அமையும். யாழ்ப்பாணத்தில் இன்று பெண்கள் விதம்விதமான அணிகலன்களை அணிவதில் பெருவிருப்பு கொண்டிருக்கின்றார்கள் என்று கூறுவதிலும் பார்க்க புதியபுதிய கலை நுட்ப முறையில் அமைந்த ஆபரணங்களை தம்மிடத்தே கொண்டிக்க வேண்டும் என்ற பெரு விருப்பு கொண்டவர்களாக காணப்படுகின்றனர். இத்தகைய ஒரு மனப்பாங்கானது தமிழ் பெண்களிடத்தில் மிகக் கூடுதலான ஆபரணங்களும் அவற்றின் மீதான விருப்பும் ஏற்படுவதற்கு காரணம் ஆயிற்று.

இத்தகைய ஓர் அடிப்படையான போக்கானது நீண்டகாலமாக யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண்கள் மத்தியில் நின்று நிலைத்திருந்ததன் காரணமாக (பாரம்பரிய)பழைமையான ஆபரண வடிவங்களை வைத்துப் பாதுகாக்கின்ற தன்மை/முறை அற்றுவிடக் காரணம் ஆயிற்று. எனினும் இத்தகைய ஒரு நிலையில் பழமையான அணிகல வடிவங்கள் கைவிடப்பட்டிருந்த பொழுதிலும் யாழ்ப்பாணத்தின் சில குறிப்பிட்ட பகுதிகளில் மாத்திரம் (ஓரளவிற்காவது) இன்றுவரை வம்சாவழியாக/செல்வமாக அவை பேணிப் பாதுகாக்கப்பட்டுக் கொண்டு வருகின்ற நிலையைக் காணலாம். இவ்வாறான ஒரு நிலையை வடமராட்சிப் பிரதேசத்தில் அல்வாய், வியாபாரிமூலை, தம்பசெட்டி, திக்கம் போன்ற பகுதிகளில் காண முடிகிறது. இந்நூலின் ஆய்வாளர்கள் இக் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக மேற்கொண்ட வெளிக்கள ஆய்வுகளின்போது மேற்குறிப்பிட்ட அக்கருத்தினை உறுதிப்படுத்தக் கூடியதாக இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழர் மரபிலே ஆபரணங்கள் பற்றிக் கொண்டுள்ள கருத்தானது பெருமளவிற்கு அச்சமூகத்தினரின் பிரதான தெய்வங்களுடன் இணைக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். தென்னாசியாவில் எந்தவொரு கலைமரபினை எடுத்துக் கொண்டாலும் அல்லது கலை நுட்பத்தினை எடுத்துக் கொண்டாலும் அவற்றின் பிரதான வெளிப்பாடும் நோக்கமும் சமயத்தோடு சார்ந்து நிற்பதை அவதானிக்கலாம். சமயத்தை அடிப்படையாகச் சார்ந்திராத எந்த ஓர் அம்சமும் மக்கள் மத்தியில் பேணப்பட்டிருக்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அத்துடன் மக்கள் மத்தியில் அவ்வாறு பேணப்பட்டிருக்க முடியாத நிலைக்குரிய காரணங்களை கலாஜோதி ஆனந்தகுமாரசுவாமி தனது நூலான சிவானந்த நடனத்தில் குறிப்பிட்டுள்ளார். அவருடைய இக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது யாழ்ப்பாணப்பெண்கள் அணியும் அணிகலன்கள் அவற்றின் வடிவம் கலைவெளிப்பாடும் அக்கலை வெளிப்பாட்டினை தாங்கிவரும் ஊடகங்களான வடிவங்கள் என்பன எல்லாம் ஏதோ ஒருவிதத்தில் ஒருவித சமய தேவையை நிறைவுசெய்வனவாக



படிப்பகம்

www.padippakam.com

உள்ளன. இந்நிலையில் தமிழர் மரபில் தோற்றம்பெற்று இருந்த பக்தி இலக்கியங்களும், பாசுரங்களும், திருமுறைகளும், மெய்கண்ட சாஸ்திரங்களும், தத்துவக் கருத்துக்களும் ஆபரணங்களைப் பற்றிய தேவையினையும் அவற்றின் குறியீட்டுப் பொருளமைதியினையும் குறிப்பிட்டுள்ளமையைக் காணலாம். அத்தகைய விபரணங்கள் ஏதோ ஒரு வகையில் ஆபரணங்களுக்கும் தெய்வீகத்துக்கும் இடையிலான தொடர்பினை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. சூடிக்கொடுத்த நாச்சியார் தொடக்கம் கண்ணனின் கோபியர் வரையும் ஆபரணங்கள் வகிக்கின்ற முக்கியத்துவம் பல் வகைப்பட்டது; பன்முனைப்பட்டது.

இப் பின்னணியில் நோக்கும் போது தமிழர் பாரம்பரியத்தில் வரும் கடவுளர்களுடைய பால் வேறுபாட்டினையும் ஆபரணங்கள் அணியப்பெற்ற வகையிலேயே இருந்து பிரித்தறிந்துகொள்ள முடிகிறது. ஆண் கடவுளரிற்கும் பெண் கடவுளரிற்கும் இடையே உள்ள முக்கியமான வேறுபாட்டை ஆபரணங்கள் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டிருப்பதனைக் காணலாம். கடவுளருடைய மூர்த்தங்கள்கூட ஆபரணங்கள் அணியப்பெற்ற வகையில் வேறுபட்டிருப்பதைக் காணலாம். யாழ்ப்பாணத்தில் சிறுதெய்வ வழிபாட்டிற்கும் பெருதெய்வ வழிபாட்டிற்குமிடையிலான வேறுபாடு கூட இத்தகைய ஆபரணவடிவில் இருந்து உணர்த்தப்படுவதைக்காணலாம். இதே போன்று கால வேறுபாட்டினை உணர்த்துவதன் பொருட்டும் வேறுபட்ட ஆபரணவகைகள் பின்பற்றப் பட்டமையைக் காணலாம். இவ்வாறான ஒரு சமயநெறி முறையின் பின்னணியில் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்திருந்த யாழ்ப்பாணப் பெண்களின் சமூகமானது சமய நெறிமுறையின்கண் வந்த அதே வழியில் ஆபரணங்களை அணிந்துகொள்ளும் வழக்கத்திலும் பின்பற்றியிருந்ததைக் காணலாம். ஒரு பெண் குழந்தை பூமியில் ஜனனமாகிய நிலையில் இருந்து அக் குழந்தை பூப்படைந்து திருமண நிலையை அடையும்வரை உள்ள பல் வேறு பருவங்களில் – நிலைகளில் அணிந்துகொள்ள வேண்டும் என்று ஓரளவிற்காவது விதந்துரைக்கப்பட்ட ஆபரண வகைகளை நோக்கும்போது அவர்களது சமயநெறி முறைக்கும் சமூகப் பழக்க வழக்குக்குமிடையே அதிக வேறுபாடு இல்லாது இருப்பதைக் காணலாம். இதனால் கடவுளரிற்கான தனித்துவமான ஆபரண வகைகள் என்று பிரித்து இனம் காணுவது முடியாதுள்ளது. ஆனால் அக்குறிப்பிட்ட சமூகத்தின் மத்தியில் காணப்படுகின்ற பொருளாதார ஏற்றத் தாழ்வுகளிற்கு ஏற்பவும் தொழிலை அடிப்படையாகக் கொண்ட சாதிப்பாகுபாட்டிற்கு ஏற்ற வகையிலோ ஆபரணங்களை அணிந்துகொள்ளும் விதத்திலும் அவற்றின் வடிவத்திலும் வேறுபாடு இருப்பதனை கண்டு கொள்ள முடிகின்றது. யாழ்ப்பாணப் பெண்கள் அணியும் ஆபரணங்கள்



படிப்பகம்

www.padippakam.com

என்ற நோக்கில் அப்பிரதேசத்துக் குள்ளும் சிறுசிறு வேறுபாடுகள் இருப்பதனை அப்பிரச்சினை தொடர் பான ஆய்வில் ஈடுபட்டபோது உணர முடிந்தது. குறிப்பாக வடமராட்சிக் குள்ளேயே தம்பசிட்டி வியாபாரிமூலை போன்ற இடங்களில் பெண்கள் அணிந்துகொள்ளும் ஆபரணங்களின் தன்மை வடிவங்கள் என்பவற்றிற்கும் வல்வெட்டித்துறையில் பெண்கள் அணிந்துகொள்ளும் அணிகலன்களுக் குமிடையே நிலவும் பாரிய வேறுபாடு களைக் குறிப்பிடலாம். இதே போன்ற ஒரு தன்மையை யாழ்ப்பாணத்திற்கும் மட்டக்களப்பிற்கும் இடையே உள்ள தொடர்புகளின் அடிப்படையிலே வேறு பாடுகளை அவதானிக்கலாம். ஒரு வேளை இவ் வேறுபாடுகளிற்கான அடிப்படைகள் ஒன்றில் செய்கின்ற தொழிலை அடிப்படையாகக் கொண்ட நிலையிலோ அல்லது எமது சமூகத் தில் புரையோடிப்போய் இருக்கும் சாதியை அடிப்படையாகக் கொண்டதா கவோ இருக்கலாம்.

எது எவ்வாறெனினும் யாழ்ப்பாணத் துப் பெண்கள் அணியும் அணிகலன் கள் பற்றிய நுண்கலை நின்ற ஆய்வு நோக்கில் ஏற்பட்ட சில வரையறை களையும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானதாகும். குறிப்பிட்ட இப் பிரச்சினை தொடர்பான வரையறை என்னும்பொழுது, ஒன்று காலம் தொடர்பான பிரச்சினை பிரதானமான தாக உருவெடுப்பதனைக் காணலாம். யாழ்ப்பாணத்தில் குறைந்தது மூந் நூறுக்கு மேற்படாத நிலையில் பழைமை மிக்க எந்த ஒரு கலைக் கருவூலங்களுமே இன்றுவரை பேணப் பட்டு இருக்கவில்லை என்பதனை நாம் மனங்கொள்ளல் வேண்டும். 16ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் யாழ்ப்பா ணத்தில் போத்துக்கீசர் வருகை ஏற் பட்டதைத் தொடர்ந்து–அவர்களாலும் பின்னர் தொடர்ந்து வந்த ஒல்லாந்தர் களாலும் பழமையான வரலாற்றுக் கருவூலங்கள் அனைத்துமே அழிக்கப் பட்டுவிட்டன. இந்நிலையில் யாழ்ப் பாணத்து பழமையான சான்றுகளை நாடித்தேடிச் செல்வது என்பது முயற் கொம்பினைப் பெற்றுக் கொள்வது போலாகிவிடும். இந் நிலையில் யாழ்ப் பாணத்தின் சில பகுதிகளில் மறைந்து இருந்து இருக்கக்கூடிய சில புராதன கருவூலங்கள்கூட அவற்றின் பெறுமதி உணரப்படாத நிலையில் கைவிடப் பட்டதனையும் காணலாம். இவ்வாறு கைவிடப்பட்ட பழைய கலை மரபு களுள் ஒன்றாகவே யாழ்ப்பாணத்து மரபுரீதியான ஆபரணக்கலை பற்றிய கைநுட்பம் அமைந்ததென்றால் அதில் தவறேதும் இருக்க முடியாது. இன்று அக் கைநுட்பத்தினை விரும்பாத தமிழ்ப் பெண்கள் இயந்திர நுட்பத் தினை அதாவது Machine cutting ஐ பெரிதும் விரும்பி வரவேற்கின்றார்கள் என்றால் எமது கலைமரபில் சமயம் பெற்ற இடம் அங்கே அதன் வழி வந்த பண்பாட்டுச் சூழல் எங்கே என்று தேடும் அளவிற்கு வந்து விட்டது. ஆகவேதான் யாழ்ப்பாணத்து தமிழ்ப் பெண்கள் அணியும் ஆபரணங்கள் பற்றிய நோக்கில் இருந்து மூன்று நூற்றாண்டுகளிற்குட்பட்ட ஆபரண



படிப்பகம்

www.padippakam.com

வடிவங்களைப் பற்றிய ஆய்விற்கு எடுத்துக்கொள்ள முடிந்தது. யாழ்ப்பாணத்தை ஒல்லாந்தர் ஆதிக்கம் செலுத்தியிருந்த காலம் முதல் அவர்களால் சேகரிக்கப்பட்டு இருந்த தமிழ் மக்களுடைய ஆபரணங்களிற் சில இன்று ஒல்லாந்து தேசத்தில் உள்ள லெய்டன் தேசிய அரும்பொருட் காட்சிச்சாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. ஒல்லாந்தரைத்தொடர்ந்து இலங்கையை ஆட்சிசெய்த ஆங்கிலேயர்களினாலும் இப்பிரதேசத்தில் ஆபரணவகைகள் பல சேகரிக்கப்பட்டு இங்கிலாந்தில் உள்ள லண்டன் நூதனசாலையிலும் விக்டோரியா அரும்பொருட்காட்சிசாலையிலும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நூதனசாலைகளில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள தமிழ்ப்பெண்கள் அணியும் ஆபரணங்கள் பற்றிய விளக்க நூல்களை அடிப்படையாகக் கொண்டும் கள ஆய்வின் மூலமும் பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டுமே கிபி 17ம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண்களது ஆபரணங்கள் பற்றிய நுண்கலை நின்ற நோக்கில் இவ்வாய்வினைச் செய்ய முடிந்தது. ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலை காரணமாக வெளிக்கள ஆய்வினை விரிவாக செய்ய முடியாதிருந்தமை இங்கு குறிப்பிட்டாகவேண்டும்.

இது மாத்திரமன்றி இக்குறிப்பிட்ட பிரச்சனை தொடர்பாக இவ்வாய்விற்கு முற்பட்ட நிலையில் அறிஞர்கள் எவரும் தமது ஆய்வு முயற்சிகளை மேற்கொண்டு இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் இடைக்கால சிங்களக்கலை என்ற நூலில் கலாஜோதி ஆனந்தக் குமாரசுவாமி சில முன்னோடிக் குறிப்புக்களை தந்துதவுவதனைக் காணலாம். தமிழ்ப் பெண்களின் ஆபரணங்கள் பற்றி ஆய்வு செய்வோரிற்கு அக்குறிப்புக்கள் தகவல் தேட்டத்தினடிப்படையிலும் நுண்கலை நின்ற நோக்கின் அடிப்படையிலும் பெரும் உபயோகமானதாக அமையும். இலங்கையில் தமிழ்ப் பண்பாடு பற்றி பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்ட M.D. இராகவன் என்ற அறிஞர்கூட யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண்களின் ஆபரணங்கள் பற்றி அதிகம் குறிப்பிடாமல் இருந்தது அதிக வியப்பிற்குரியதே. இந்நிலையில் இவ்வாய்வு இனிவரப் போகின்ற ஆய்வாளர் ஒருவருக்கு முதல்நூலாகவும் அமையலாம்.



படிப்பகம்

www.padippakam.com

அத்தியாயம் இரண்டு

## இலங்கையில் பெண்கள்அணியும் அணிகலங்களும் அவைபற்றிய விளக்கமும்.

இந்த அத்தியாயத்தில் மேலோட்டமாக இலங்கையில் பெண்கள் அணிந்து வந்த அணிகின்ற அணிகலன்களைப் பற்றி நோக்குவது அவசியமானதாக அமைகின்றது. இக்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்களும் நந்த விஜய சேகர என்பவரும் ஓரளவுக்காவது ஆய்வுசெய்துள்ளனர். மாட்டின்விக்கிரம சிங்க என்பவர் ***Sinhalese Culture*** என்ற தனது நூலில் சிங்களப்பெண்கள் அணியும் ஆபரணங்கள்பற்றி குறிப்பிட்டுள்ளார். கலைப்புலவர் நவரெட்ணம் அவர்கள் இலங்கையில் கலைவளர்ச்சி *Arts and Crafts of Jaffna,* தென் இந்திய சிற்ப வடிவங்கள் என்ற நூல்களில் ஓரளவுக்காவது ஆபரணக் கலை பற்றிய குறிப்புக்களையும் கொடுத்துள்ளார். இவ்வாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் பெண்கள் அணியும் அணிகலங்கள் பற்றி ஆராய முடிகின்றது.

கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப் பெற்ற நூற்றாண்டு மலராகிய இலங்கையிற்கல்வி என்ற நூலில் இடம்பெறும் (முதலாம் பாகம்) அணிகலன்கள் பற்றியகுறிப்பும் இங்கு நோக்கத்தக்கது.

அரசமரம் கொண்டுவரப்பட்டபோது இலங்கைக்குவந்த கம்மியரின் செல்வாக்கு ஆபரணம் செய்யும் கலையிலே தொழில்நுட்பம், முறை, பாங்கம், உருவமைப்பு, நோக்குரு என்னும் அம்சங்களில் நன்குதெரிகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

அனுராதபுர காலத்தில் ஆபரணங்களை அணிதல் மக்கள் சமுதாயத்தில் பெரிதும் விரும்பப்பட்ட ஒரு வழக்கமாக இருந்தது என்பது சிற்பங்களில் இருந்தும் ஓவிய, வரலாற்று குறிப்புகளில் இருந்தும் வெளிப்படையாகின்றது. ஆண் பெண் இருபாலாரும் தங்கள் மேனிகளை அழகுபடுத்துவதற்காக கற்கள் பதிக்கப்பட்ட ஆபரணங்களை அணிந்தார்கள். அக்காலத்திலே வழக்கத்தில் இருந்த ஆபரணங்களிற்சில பின்வருமாறு, தண்டலாபரணம் (குண்டலம், காதணி) கக்காவல் (கழுத்தணி) கடிசூத்திரம் (ஒட்டியானம்) ருவல் தளபொட்ட (மார்புப் பொற்கச்சு) திசரபட்ட(தலைப்பட்டி) மோதிரம், சிலம்பு, காப்பு முதலியன. அனுராதபுர காலத்தில் பெண்களின் ஆபரணத்தைப் பற்றி அறிவதற்குச் சிசிரியக் கலைக் கூட பெண்களின்அணிகலன்களிலும் பார்க்க சிறந்த வரலாற்று ஆதாரம் வேறு எதுவுமில்லை. 1500 ஆண்டுகளுக்கு முன்னே மக்களிடையே வழக்கிலிருந்த ஆபரணங்களை அக்காலத்திலிருந்த அஜந்தாக்கலைகளிலும்பார்க்க மிகக்கூடிய அலங்காரங்களையும் நுட்பமாகச் செய்யபட்ட ஒப்பனைகளையும் உடைய சிகிரியா உருவங்களில் இருந்து அறியலாம். அலங்கார நோக்குரு பொதுவாக அக்காலத்து மரபொழுங்கைச் சார்ந்த புத்தசமய கலையைப் பின்பற்றியதெனினும் சிகிரிய ஓவியங்கள் பலவிதமான தலை ஒப்பனைகள் போன்ற தனியம்சங்களை கொண்டுள்ளன. அலங்கார முடியின் மத்தியிலுள்ள பெரிய இரத்தினக்கல் அதன் அழகை மிகைப் படுத்துகிறது. காதணிகள் அல்லது குண்டலங்கள் வெவ்வேறு வகையின. மிக எளிய வகை காதணியானது பிறை வடிவத்திலமைந்த வளையம் ஆகும். காது சோணையின் துளையைப் பெருப்பித்து அதனுள் வட்டமாக வைக்கும் ஓலைச்சுருள்(தோடு) ஒரு பொதுவான காதணியாகும். சிகிரியாச்சுவர் ஓவியங்களில் இவை தெளிவாகத்தெரியும். காதணியாக உபயோகிக்கப்படும் ஓலையின் சுருள் தால பத்திரம் எனப்படும். இது மணமான பெண்கள் அணியும் மங்களாபரணமாக கருதப்பட்டது. ஓலையின் சுருளைப்போன்று பொன்னால் செய்யப்பட்ட சுருள் சுவர்ணபத்தி குண்டலம் (பொற்றோடு) எனப்படும். இங்கு இரு வகையில் அணிந்த காதணிகள் குறிப்பிடத்தக்கது. ஒன்று சுறுள்சுறுள்களாக காது இதழின் துளையில் செருகப்பட்டிருந்த ஆபரணம். மற்றையது காது இதழின் கீழ்ப் பாகத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் காதணி மேலும் சிகிரியா உருவங்களிற் பல்வேறு வேலைப்பாடுடைய கழுத்தணியைக் காணலாம். உருவங்களிற் சில நாலு, ஐந்து கழுத்தணிகளைப் பூண்டு இருக்கின்றன. ஒவ்வோர் உருவமும் நடுவில் ஒரு மணியும் இரு பக்கத்தில் ஒவ்வொரு சிறு மணியுமாக மூன்று மணிகளை நூலிற் கோத்த மாலையை உடையனவாக காணப்படுகின்றன. இது மணமான இந்துப்பெண்களின் சின்னமான தாலிக் கொடியைப் போன்றிருக்கும். மற்றைய மாலைகளில் முக்கியத்து



படிப்பகம்

www.padippakam.com

வம் வாய்ந்தது. அஸ்டகா எனப்படும் அட்டிகையாகும். இதனை ஒருபெரிய இரத்தினக் கல்லும் முத்துக்கள் அல்லது பொன்னரும்புகள் போலத் தோன்றும் விளிம்பும் அலங்கரிக்கின்றன.

அடுத்து முன்னைச் சிங்கள ஓவியம் என்ற நூலில் சிகிரிய மகளிர் அணிந்த அணிகலன்கள் தொடர்பாக இடம் பெற்றுள்ள விபரங்களும் இங்கு நோக்கத்தக்கது

இங்கு தலையணிகள், கூம்பி உயர்ந்த வடிவம், ஆபரணங்களில் காணப்படும் செழித்த மலர்ச் சேர்ப்புக்கள் ஆகியன பொதுமரபிற்குரிய அம்சங்களாக உள்ளன. உடல் அணிகள் பொதுவான ஒரு கலாசாரத்திற்குரியனவாக இருக்கலாம். இவை ஒன்றுக் கொன்று குறிப்பிடத்தக்க ஒப்புவமை கொண்டன. அட்டியல்கள், பாரிய வட்டத் தோடுகள், காப்பு, தொடிகள், கணையாழிகள் ஆகியவை ஒரு பொதுமையான மரபாக எல்லாப் பெண்களும் அணிகின்ற ஆபரணங்களாக காணப்படுகின்றன. இக்காலத்துப் பெண்கள் தமது அழகியல் நாட்டத்தில் மிக விருப்புடையோராகவும், அவற்றை பூர்த்தி செய்வதில் மிகவும் சுதந்திரம் உடையோராக விளங்கினர் என்பதை சிகிரியா சுவர் ஓவியங்களிலுள்ள மாதர்களணிந்த ஆபரணங்கள் சான்றாகின்றன. அவைகள் தமது உடல் அழகினைப் பேணுவதற்கும் மிக விலையுயர்ந்த வேலைப்பாடுகள் மிக்க அணிகலன்களிற்கு பெருமளவு பொருள்களையும் நேரத்தினையும் செலவழித்திருந்தனர் என்பது கண்கூடு. சுவையும் தேர்வும் வண்ணத்திட்டமும் இப் பெண்கள் அணிந்த அணிகலன்களின் வகைகளிலிருந்து அவர்கள் மிக்க நாகரீக முதிர்வு பெற்றிருந்தார்கள் என்பதனை அறியக்கூடியதாக உள்ளது. ஆனால் சில கலை வல்லுனர்கள் சிகிரியப் பெண்களணிந்த ஆபரணங்கள் அரசவைக்குரிய அணிகலன்களென்பதனை எடுத்துக் காட்டினர். சீகிரியப் பெண்கள் அணிந்த கை வளையல்கள் பெருமளவிற்கு யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பெண் ஒருத்தி அணிந்திருந்த சிங்கமுக கூட்டு காப்புகளிற்கு ஒப்பானதாக இருப்பதனையும் காணலாம். அதே போன்ற *Arm let* என அழைக்கப்படும் கேயூரங்கள்(புய அணிகலன்கள்)யாழ்ப்பாணத்துத் தமிழ் மணமகள் ஒருத்தி அந்நாளில் அணிந்து கொள்கின்ற கேயூரத்திற்கு ஒப்பானதாக உள்ளது. ஒருவேளை இது பொதுமையான ஒரு அணிவகையாக இருசாராரிற்கு மிடையே விளங்கி வருவதனைக் காணலாம். சிகிரியப் பெண்கள் அணிந்த தாலி வகைகள் நோக்கத்தக்கவை. பதின்மூன்று வகையான தனித்துவம் வாய்ந்த தாலி வடிவங்களைப் பற்றி ஆராய்ந்து, அவைபற்றி நந்தவிஜயசேகர தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இதேபோன்று எட்டு வகையான கழுத்து மாலை விபரங்களையும் மார்புப் பதக்கம் பற்றிய விபரங்களையும் எடுத்துக் காட்டியுள்ளார். சீகிரியப் பெண்கள் அணிந்திருந்த **Breast Let** என்ற மார்பு நூல் மிக முக்கியமான அணிகல



படிப்பகம்

www.padippakam.com

னாகக் காணப்படுகின்றது. காதணி விபரங்களைப் பொறுத்தமட்டில் குண்டலங்கள் ஐந்து வகையாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றை விட தலைக்குரிய அலங்காரப்பொருட்களாக கிரீடங்கள் சிறப்பாக மலர்க் கிரீடம் இங்கு காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

சீகிரியா மாதர் அணிந்த இவ்வகையான அணிகலன்களைப்பற்றி சுருக்கமாக குறிப்பிடுவதாயின் சமகால இலங்கையிற் பெண்கள் அணிந்த ஆபரணங்களுடன் எந்தளவிற்கு ஒப்பிட்டுக் கூறலாம் என்பது இருக்க அவ் விபரணங்களை உருவாக்கியணிந்த பொற் கொல்லர்கள் கொண்டிருந்த கலை நுட்பங்களை இங்கு நோக்குவது பொருத்தமானதாகும்.

சீகிரிய ஓவியப் பெண்களின் ஆபரணங்களின் கலைநுட்பங்கள் பெருமளவிற்கு சதுர அடைப்புக்களிற்குள்ளே கண்ணைக் கவருபவையாகவும் அழகிய வண்ணங்களில் அப்பெண்களினது பொன்மேனிக்கு இயைந்த வகையில் வரையப்பட்டுள்ளனவாகவும் காணப்படுகின்றன. அணிகலன்கள் யாவும் கண்ணைக்கவருகின்ற தங்கக் கைவினைத்திறனை காட்டிநிற்கின்றன. தலைகளுக்குரிய மலர்முடிகள், கண்ட சரங்கள், அட்டியல்கள், பதக்கங்கள், மணிபதித்த காப்புக்கள், கங்கணங்கள் இப்படிப் பல வகையான அணிகலன்கள் தீட்டப்பட்ட கலைநுட்பங்கள் பாரம்பரிய அணிகலன்களைப் பற்றி பொற்கொல்லர் கொண்டிருந்த அறிவினையே காட்டிநிற்கின்றது. மேலும் ஒட்டியாணம், மூக்கணிகள், கணையாழிகள் போன்ற அணிகலன்கள் சிகிரியச்சுவர் ஓவியத்தில் காணப்படும் மாதர்கள் அணிந்திருக்கப்படாமையைக்கொண்டு அவை பிற்காலத்திலேயே இலங்கைப்பெண்கள் அணியும் ஆபரணங்களாக அறிமுகப்பட்டிருந்ததனைக் காணலாம். கொப்பூழிலிருந்து ஓர் அங்குலம் இறங்கி உடலோடு ஒட்டியவாறு அணியப்பெற்ற உள் இடுப்பாடைக்கு மேல் ஒற்றை நூலில் மார் பணி *(Breast let)* அணியும் வழக்கம் சிகிரிய மாதர் அணியும் வழக்கம் இருந்தமையைக் காணலாம். இதே பண்பு 10ம், 11ம் நூற்றாண்டை சேர்ந்த பொலநறுவை பார்வதி சிற்பங்களில் காணமுடிவதும் இங்கு நோக்கத்தக்கது. பொதுவாக சிகிரியமாதரின் அணிகலன்களை மூன்று வகையாக வகுக்கலாம். அவையாவன சாதாரண வளையல், பதக்கம், செதுக்கிய வளையல் என்பவையாகும். இப்பதக்கங்களிலும் வளையல்களிலும் மணிகள் பதித்து அணியவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இரண்டு: தலைக் கிரீடங்களிலும், கழுத்தணிகளிலும் விலை உயர்ந்த இரத்தினக் கற்களைப் பதித்து ஆபரணங்களை அணிகின்ற முறை. மூன்று: (கைத்தொடி) என்ற அணிகலன் சோழிகையின் விளிம் போடு மருவிக்காணப்படுகிறது. கைத் தொடி அல்லது கேயூரம் *(Arm let)* என்ற அணிகலனாகும். சில வேளைகளில் இது ஒரு தடித்த பொற்பட்டிகையாகவோ அல்லது இரண்டு பட்டிகையை இணைத்ததாகவோ ஆக்கப்



படிப்பகம்

www.padippakam.com

பட்டதாக இருக்கலாம். இத்தகைய தொரு கேயூரம் என்ற ஆபரணம் மலர்க்கொடி வடிவிலும் அல்லது இரத்தினக்கல் பதிக்கப்பட்டவையாயின் நாகபடம் போன்ற வடிவிலும் அமைக் கப்பட்ட நிலையில் புயத்தை அணி செய்து நின்றமையைக் காணலாம்.

நான்கு வகையாக கழுத்தணிகள் சிகிரிய மாதர் மத்தியில் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவையாவன கழுத்துப்பட்டி, அட்டியல், பதக்கம், மாலை என்பனவாகும். கழுத்துப்பட்டி என்பது கழுத்தடியில் சிலமணிக ளைக் கொண்டு ஒற்றை நூல ணியாகும். அடுத்து அட்டியலில் இரண்டு வகையான பிரிவுகளைக் காணக்கூடியதாக உள்ளது. ஒரு வகையில் ஒற்றைத் துண்டில் வேலைப்பாடுடையதாய் அகன்றமைந்த ஒருபட்டி மற்றையது மிகவும் நுட்பமான முறையில் முன்னால் ஒரு மணிக்கல்லோ பலவோ பதிக்கப்பட்ட மிகவும் நுண்மையான நூலணிவகை மூன்றாவதான பதக்கம் இவற்றுள் மிகக்கவர்ச்சியானது. மிகச் சீரிய வனப்புவாய்ந்த இப்பதக்கத்தி னைப் படைப்பதில் கலைஞனின் கைத்திறனும் கைவினைஞனின் நுண் நோக்கும் இணைந்து செயல் புரிந்தன எனலாம். இரு பக்கத்து நூல் பூட்டோடு இணைத்து ஒரு முழு அலகாக நிறைவுற்றது. இவற் றின் மேல் மென்னையான மலர்மாலை சேர்ந்து இணைந்தமை சிகிரிய மாதரின் அணிகலன்களை திறவு படுத்துவதாகவுள்ளது.

தமிழ் நாட்டு அணிகலன்கள் என்ற நூலில் இராகவன் பின்வருமாறு தமிழ்ப் பெண்கள் அணியும் அணி கலன்களைப் பட்டியல்படுத்துகின்றார். இங்கு அணிகலன்களை பேரணி கலன்கள் என்றும் அவை தலை, காது, கழுத்து அணிகலன்கள் எனப் பிரிக்கப்பட்டு பின் அவை பல உப பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

தலையணி: தாழம்பூ, தாமரைப்பூ, சொருகுப்பூ, அடுக்குமல்லிகைப்பூ, இலை, அரசிலை, பதுமம், சரம், பூரப்பாளை, கோதைவலம்புரி என்பன.

காதணி: தோடு, கொப்பு, ஓலை, குழை, இலை, குவளை, கொந்தினவோலை, கன்னப்பூ, முருகு, விசிறி, சின்னப்பூ, வல்லிகை, செவிப்பூ, மடல் ஆகியன.

கழுத்தணிகள்: கொத்து, கொடி, தாலிக்கொடி, கொத்தமல்லி மாலை, மிளகுமாலை, கடுமணிமாலை, நெல்லிக்காய்மாலை, மருதங்காய்மாலை, சுண்டக்காய்மாலை, காரைப் பூமாலை, அட்டிகை, அரும்ச்சரம், மலர்ச்சரம், கண்டசரம், கண்டமாலை, கோதை மாலை, கோவை போன்றன.

புய அணிகலன்கள்: கொத்திக்காய்.

கால் அணிகலன்கள்: மாம்பிஞ்சுக்கொலுசு, அத்திக்காய்க்கொலுசு, ஆலங்காய்க் கொலுசு,

கை அணிகலன்கள்: சிலந்திப்பூ மோதிரம், அரம்பு, வட்டப்பூ.

அ) தலை அணிகலன்கள்: கரண்டமகுடம், கிரீடமகுடம், மணிமகுடம்(இரத்தின மகுடம்) சடாமகுடம்.

ஆ) தலை அணிகலன்கள்: அரசிலை, இராக்குடி, இலம்பகம், இலை, கடிகை, கன்னசரம், குச்சம், குஞ்சம், திருகு, கோகை, சடாங்கம், சடைநாகர், சடைத் திருகு, சந்திரபிறை, கடிகை, சுட்டி, சுரிதம், சூடிகை, சூடாமணி, சூடை சூட்டு, சூரியபிறை, சூழி, சூளாமணி, சேகரம், சொருகுப்பூ, தலைப்பாளை (தொய்யகம்) தாளம்பூ, தெய்வஉத்தி, பட்டம், பிறை, புல்லகம், பொலம்பூந்தும்பை, பொற்ப்பூ, பொற்றாமரை, பொன்வாகை, பொன்னரிமாலை, மாராட்டம், முகசரம், முஞ்சம் வயந்தகம், வலம்புரி

இவ்வணிகலன்களை ஆண், பெண் என இருபாலாரிற்கும் எனப்பிரித்துக் காட்டியும், அவை என்ன வகையான கற்களால் எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளன போன்ற விட யங்களையும் விரிவாகத்தந்துள்ளார்.

மேலும் *Arts and Craft of Jaffna* என்ற நூலில் கலைப்புலவர் நவரட்ணம் யாழ்ப் பாணத்துத் தமிழ்ப் பெண்கள் அணிகின்ற பாரம்பரியம் வாய்ந்த ஆபரணங்களை பின்வரும் பட்டியல் போட்டுக் காட்டுகின்றார்.



படிப்பகம்

www.padippakam.com

**Head Jewels:** Nettivari (நெற்றிவரி), Uchchivari (உச்சிவரி), Sooryapirai and Chandrapirai (சூரியபிறை, சந்திரபிறை), Rakkodi (ராக்கொடி), Thazhamboo (தாழம்பூ), Valaithazhamboo (வளைதாழம்பூ), Chadainagam (சடைநாகம்), Kondaipoo (கொண்டைப்பூ)

**Ear Jewels:** Kompuvali (கொம்புவாளி), Murugu (முருகு), Myrmaddy (மயிர்மாட்டி), Thodu(தோடு), Kadukkan (கடுக்கன்), Kathupoo (காதுப்பூ), Karanaipoo (கறனைப்பூ), Kuradu (குறடு)

**Nose Jewels:** Minni (மின்னி), Pulakku (புலாக்கு), Mukkuthi (மூக்குத்தி)

**Neck Jewels:** Keechchumani (கீச்சுமணி), Ulkattu (உட்கட்டு), Ainthupattumani (ஐந்துபட்டு மணி), khampippooran attiyal (கம்பிப்பூரான் அட்டியல்), Charadu (சரடு), Kalladdiyal (கல்லட்டியல்)

**Hand Jewels:** Singamukha Kappu (சிங்கமுகக்காப்பு), Kangakanam (கங்கணம்), Kolusu (கொலுசு), Sambunatha Valayal (சம்பு நாதவளையல்), Amhukkamaioddu Valayal (அமுக்காமைஒட்டு வளையல்).

**Feet Jewels:** Pathasaram (பாதசரம்), Thandai (தண்டை), Kalkolusu (கால்கொலுசு), Nellikai Kolusu (நெல்லிக்காய் கொலுசு), Peelimylady (பீலிமைலேடி), Munthangki (முன் தாங்கி), Meenkunchu (மீன்குஞ்சு).

**General:** Sarapali (சரப்பளி), Gowrisankarm (கௌரிசங்கரம்), pathakkam (பதக்கம்), Panchayutham (பஞ்சாயுதம்), Araimudaichsalangai (அரைமுடைச்சலங்கை), Oddiyanam(ஒட்டியாணம்), Adcharakudu (அட்சரக்கூடு), Sangili (சங்கிலி), Avalmalai (அவல்மாலை).



படிப்பகம்

www.padippakam.com

அத்தியாயம் மூன்று

## யாழ்ப்பாணத்துச் சமூக அமைப்பில் பெண்களின் அணிகலன்கள்.

அறிமுக உரையில் குறிப்பிட்டது போன்று யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண்களின் அணிகலன்கள் பற்றிய நுண்கலை நின்ற ஆய்வில் அச்சமூக அமைப்பின் பின்னணியில் அணிகலன்கள் வேறுபடுகின்ற தன்மையினை ஆராய்வது இவ் அத்தியாயத்தின் பிரதானநோக்கமாக அமைகின்றது. அணிகலன்கள் சமூக ஏற்றத்தாழ்வுகளின் குறியீடுகளாக அமைகின்றதன் காரணமாக சமூகத்தில் அவை பெறுகின்ற முக்கியத்துவத்தை மதிப்பிடல் அவசியமாகின்றது. தற்பொழுது யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற தமிழ்ப் பெண்களின் சமூக அமைப்பு நிலைபற்றி ஓரளவிற்கு இங்கும், அங்குமாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சமூகவியல் அடிப்படையிலான ஒரு முழுமையான பார்வை யாழ்ப்பாண தமிழ் சமூகத்தை மையப்படுத்தி உருவாக்கப்பட்டு இருக்காத பொழுதிலும் M.D இராகவன், கா. சிவத்தம்பி போன்றோர் உட்பட, தற்பொழுது பெண்கள் ஆய்வு வட்டத்தின் அங்கத்தினர்கள் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக ஓரளவிற்கு ஆய்வு முயற்சிகளை மேற்கொண்டு வருவதனைக் காணலாம். இத்தகைய ஆய்வுகளின் பெறுபேற்றினைக் கொண்டு யாழ்ப்பாணத் தமிழ் பெண்களின் சமூகப் பின்னணியில் அணிகலன்கள் பெறுகின்ற பங்கு, அவை தொடர்பான நுண்கலை நின்ற நோக்குகளையும் ஓரளவிற்கு இங்கு எடுத்துக்காட்டக் கூடியதாக உள்ளது.

தமிழ்ப் பெண்களின் சமூக அந்தஸ்த்தினை அளவீடு செய்கின்ற ஒரு



படிப்பகம்

www.padippakam.com

முக்கிய பொருளாக அணிகலன்கள் விளங்கிவந்திருக்கின்றன, வருகின்றன. ஐரோப்பியர் வருகைக்கு முற்பட்ட காலகட்டத்தில் யாழ்ப்பாணத் தமிழ் பெண்களின் சமூக வாழ்வில் எந்தள விற்கு அணிகலன்கள் முக்கிய இடம் வகித்து இருந்தன என்பதனை இட்டு ஆராய்வதற்கு போதிய சான்றுகள் கிடைக்காவிட்டாலும் கூட சமகால தென் இந்திய மானிலங்களில் ஒன்றான தமிழ் நாட்டு மக்களின் வாழ்க்கை முறையுடன் ஒப்பிடுவதன் மூலம் ஐரோப்பியர் வருகைக்கு முற்பட்ட யாழ்ப்பாணத் தமிழ் பெண்களின் அணிகலன்கள்பற்றி ஓரளவிற்கு ஆராய முடிகின்றது. கி.பி 15ம் நூற்றாண் டின் பின்னர் ஐரோப்பியர் வருகையுடன் யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண்கள் சமூக அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் கார ணமாக, அம்மாற்றத்திற்கு அடிப்படை யாக விளங்கிய கல்வித்துறையில் அப்பெண்கள் கொண்டிருந்த ஈடுபாடு காரணமாக அவர்களது அணிகலன் கள் பற்றிய நோக்கு நிலை மாற்றம டைந்து சென்றதைக் காணலாம். போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக்காலங்களில் கிறிஸ்தவமதம் இலங்கையில் கரையோர மாகாணங் களில் சிறப்பாக யாழ்ப்பாணம், மன்னார் பிராந்தியங்களில் பெரும் செல்வாக்கு செலுத்தியதைத் தொடர்ந்து தமிழ் பெண்களுடைய வாழ்க்கையில் கிறிஸ் தவமதத்தின் செல்வாக்குநிலைகள் ஏற் பட்டதை அடுத்து ஆபரணக் கலை யில் அவர்கள் கொண்டிருந்த ஈடுபாடு மாற்றமடைந்து சென்றதைக் காண லாம். ஒரு வேளை கிறிஸ்தவதத்தை தழுவுவதன் மூலம் பொருளாதார வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்கின்ற ஒரு மனப்பாங்கானது யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண்களின் பாரம்பரிய வாழ்க் கைமுறையில் சில மாற்றங்களை ஏற் படுத்தியுள்ளது. குறிப்பாக ஆடை ஆபரணங்கள் அணிகின்ற முறை யைக் குறிப்பிடலாம். இம்மாற்றங்களிற் கான அடிப்படையை சில சமூக வர லாற்று ஆய்வாளர்கள் westernization என ஆங்கிலத்தில் குறிக்கப்படும் மேலைத்தேய மயமாக்கல் என்ற நிகழ்வாகக் கருதுவர். இப்பின்னணி யில் யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பெண்க ளின் அணிகலக் கலையில் மேலை நாட்டு கலைப் பண்பின் செல்வாக்கி னைக்காணவும் முடிந்தது.

தமிழ் சமூக அமைப்பானது செய்யும் தொழிலை அடிப்படையாகக் கொண்ட சாதியமைப்பை உரமாகக் கொண்டது. இச்சாதிமுறையானது பெருமளவிற்கு சொத்துடமையை அடிப்படையாகக் கொண்டது. கூடுதலான நிலத்தை வைத்திருக்கின்ற மத்தியதர வர்க்கத் தினர் வேளாளர் அல்லது செட்டிமார் ஆவர். நிலமற்ற மற்றொரு பிரிவினர் குடிமைகளாகக் கருதப்பட்டு நிலத்தை சொந்தமாகக் கொண்ட வேளாளரில் அல்லது செட்டிமாரில் பெருமளவிற்கு தங்கியிருந்ததைக் காண முடிந்தது. இவ்வாறான ஓர் அமைப்பு முறை ஏற் றத் தாழ்வான சமூக அமைப்பு முறைக்கு இட்டுச் சென்றது. இதன் காரணமாக அதனை இலகுவில் பிரதி பலிக்கக்கூடிய பண்பாட்டு முறைகள் விதி முறையாகக் கடைப்பிடிக்கப்



படிப்பகம்

www.padippakam.com

பட்டதைக் காணலாம். இந்நிலையில் யாழ்ப்பாண சமூகத்தின் புராதன வரலாற்றுப் போக்கினை ஆராயும் ஒருவர் அச்சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகளை இலகுவில் புரிந்துகொள்வார். ஏஜமானும் அடிமையும் என்ற வரையறை உரம்பெற்று இருந்ததன் காரணமாக உடையார் பரம்பரை தமிழ் சமூக அமைப்பில் மிகவும் உயர்ந்த ஸ்தானத்தில் வைத்துப் பேணப்பட்டது. இப் பரம்பரையினரே பெருமளவிலான நில புலன்களையும் சொத்து சுகங்களையும் கட்டியாண்டதன் காரணமாக சாதியமைப்பில் உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றப்பட்டனர். எனவே இச் சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் அணியும் ஆடை, அணிகல அலங்கார முறைகள் ஓர் உயர்ந்த அந்தஸ்தில் அவர்களை வெளிக்காட்ட பெருமளவிற்கு உதவிற்று எனலாம். ஏந்த ஒரு சமூக அமைப்பிலும் அச் சமூகத்தின் பண்பாட்டுப் பரிமாணங்களை இலகுவில் வெளிக்காட்ட உதவுவது, அச் சமூகத்தைச் சேர்ந்த பெண்களது பண்பாட்டு நடைமுறைகளே. இது உலகில் எல்லா நாடுகளிற்கும் பொருந்தக்கூடிய ஒரு பொது இயல்பு (ஆனால் தற்காலத்தில் இந்நிலை அருகிவருவதும், பெண் நிலைவாதம் மேலோங்கி வருவதும் சமூக வளர்ச்சியின் ஒரு படிநிலையாகும்).

தமிழ்ப் பெண்கள் மத்தியில் சாதி அடிப்படையிலோ அன்றி வகிக்கும் பதவி அடிப்படையிலோ உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்கள் அணியும் அணிகலன்கள் பெருமளவிற்கு தங்கத்தினால் செய்யப்பட்டு இருப்பதனைக் காணலாம். ஒருகாலகட்டத்தில் இச் சமூக அமைப்பில் தங்க அணிகலன்கள் சாதிப்பாகுபாட்டின் இறுக்கமான தன்மையினை வெளிப்படுத்தும் வடிவங்களாகவும் விளங்கி இருந்தன. உடையார் பரம்பரையினர் மற்றும் வேளாளர், செட்டிமார் முதலியோர் மாத்திரமே தங்க அணிகலன்களை அணிகின்ற உரிமை பெற்றவர்களாக இருந்தனர். என்பதனை புராதன யாழ்ப்பாணம் என்ற நூலில் முதலியார் இராசநாயகம் குறிப்பிட்டுள்ளார். சாதியில் குறைந்தவர்கள் எனக் கருதப்பட்ட பெருநில சொந்தக்காரர்களுடைய தயவில் வாழ்ந்து வந்த சமூகத்தினர் பெருமளவிற்கு அடிமைகளாக கருதப்பட்டதன் காரணமாக தங்கத்தினால் செய்யப்பட்ட அணிகலன்களை அணிவதற்கு அருகதையற்றவர்கள் என்ற நிலைப்பாட்டிற்கு உள்ளாக்கப்பட்டனர். பள்ளர், பறையர், நளவர், துரும்பர், திரையர், அம்பட்டர், முதலியோர், அடிமைகள் ஆக்கப்பட்ட நிலையில் சமூக உயர்நிலையில் வாழ்ந்தவர்கள் அனுபவித்த பல்வேறு சுக அனுபவங்களை அனுபவிப்பதற்கு தகுதியற்றவர்கள் என்று எடுத்துக் காட்டப்பட்டதன் அடிப்படையில் ஒடுங்கியவாழ்க்கையே, அவர்கள் மேற்கொண்டு இருந்தனர். இந்நிலையில் அவர்கள் அணிந்த அணிகலன்களின் தன்மையும் வடிவங்களும் வேறுபட்டு அமைந்தமையினை காணமுடிகிறது.

சாதியமைப்பின் கோலங்களை சுட்டிக் காட்டுகின்ற அணிகலன்களின் வடிவங்



படிப்பகம்

www.padippakam.com

களுள் தாலி பிரதானமான ஒன்றாக உள்ளது. தமிழ்ப் பெண்ணிற்கு தாலி தரன்வேலி என்ற கோட்பாடு சங்கமருவிய காலத்தில் இருந்து தோற்றம் பெற்று படிப்படியாக வளர்ச்சி பெற்று வந்திருந்தாலும் கூட அக் கோட்பாடானது சமூகஅமைப்பு நிலையில் உள்ள வேறுபாடுகளை பொறுத்து அதன் நடைமுறை வேறுபட்டு அமைந்ததையும் காணலாம். ஓர் உயர்ந்த சாதி அமைப்பின் நோக்குநிலை தாழ்த்தப்பட்ட சாதியமைப்பின்மீது விழும்போது பெண்ணிற்குத் தாலிதான் வேலி என்ற கோட்பாடு அங்கு பலவீனம் அடைவதைக் காணலாம். ஆனால் அதே நேரத்தில் தாழ்த்தப்பட்ட சமூக அமைப்பினுள் அக்கோட்பாடு மேலோங்கிய நிலையில் பின்பற்றப்பட்டு வந்தமையினை மறுப்பதற்கு இல்லை. இந்நிலையில் தங்கத்தினால் செய்யப்பட்ட பல்வேறு வகையான தாலி வகைகளை உயர்ந்த சமூக அமைப்பு அணிந்துகொண்ட அதே நேரத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் அதற்குப் பிரதியீடான சில குறியீட்டுச் சின்னங்களை உபயோகித்து வந்தமையினைக் காணலாம். அதில் ஒன்றுதான் தாழ்த்தப்பட்ட சமூக அமைப்பினுள் திருமணமான ஆண்/பெண் இரு பாலாரிற்கும் பச்சை குத்தும் மரபு உருவாக்கப்பட்டமையாகும். தாழ்த்தப்பட்ட யாழ்ப்பாணத்தவரின் சமூக அமைப்பில் இன்றுவரைக்கும் பச்சை குத்துதல் தொடர்ந்து நிலவிவருவது குறிப்பிட்ட அச்சம்பிரதாயத்தின் ஓர் எச்சமாகும். தென் இந்தியாவில் மலை வாழ் மக்கள் மத்தியில் இப்பண்பு இன்று வரை தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் பிராமணிய சடங்காசார நெறிமுறை வைபவங்கள் நிகழ முடியாத ஒரு சூழ்நிலையே திருமண வைபவங்களின் பொழுது ஹோமம் வளர்த்து தாலி கட்டுகின்ற மரபு உருவாக முடியாது இருந்ததற்கு மற்றொரு காரணமாகக் கொள்ளப்படுகின்றது. பிராமணியசடங்குமுறைகள் அத்தாழ்த்தப்பட்ட சமூக மக்கள் மத்தியில் இடம் பெறமுடியாது அமைந்ததன் காரணமாக யாழ்ப்பாணத் தமிழரின் சுதேச கலைமரபுகள் பல அச்சமூகத்தில் நெடுங்காலம் நின்று நிலைக்கக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டு இருந்தன. ஆனால் மேலைத்தேயவரின் வருகையைத் தொடர்ந்து கிறிஸ்தவமதத்தின் தாக்கம் அச்சமூகத்தவரையே பெருமளவிற்கு பாதித்ததன் காரணமாக முதலில் மதமாற்றத்திற்குட்பட்ட சமூகமாக மாறி பின்னர் நவீனமயப்படுத்தப்பட்ட ஒருவகைமுறையை உருவாக்கிக் கொள்ளவும் முற்பட்டது. இப்பின்னணியே இன்று சமத்துவமான முறையில் அவர்களது வாழ்க்கை முறை, அணிகலன்கள் மற்றும் அனைத்து அம்சங்களிலும் உயர்ந்த சமூக அமைப்பினைப் போன்று அமைந்து கொண்டமையைக் காணலாம்.

சமூக ஏற்றத் தாழ்வுகளை சுட்டிக் காட்டுகின்ற அணிகலன்களைப் பற்றி நோக்குவது இங்கு அவசியமாகிறது. ஆரம்பத்தில் தங்கத்தினால் செய்யப்



படிப்பகம்

www.padippakam.com

பட்ட அணிகல வகைகள் அத்தனையுமே சமூகத்தின் உயர் பிரிவினை அங்கத்துவம் வகிக்கும் பெண்கள் அணியும் அணிகலன்களாக விளங்கின. சிறப்பாக தாலியை கொடியுடன் தங்கத்தினால் செய்துபோடும் முறை உயர் வர்க்கத்தினரிடையே காணப்பட்டது. மார்புப் பதக்கம் பெருமளவிற்கு உயர் வர்க்கப் பெண்களாலேயே அணியப்பட்டு வந்த அணிகலனாகும். மேலாடை அணியும் முறை மேல் வர்க்க மட்டத்திலேயே காணப்பட்டு வந்ததன் காரணமாகவும், தாழ்த்தப்பட்ட மக்கள் அவ்விதிக்குப் புறநடையாக்கப்பட்டதன் காரணமாகவும் மார்புப் பதக்கம் உயர் வர்க்கப் பெண்கள் அணியும் அணிகலனாக மாறிற்று. ஒல்லாந்தர்காலம் வரைக்கும் அடிமை குடிமை மற்றும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் இடுப்பளவிலேயே ஆடைகளை அணிந்து வந்தமை காரணமாக தங்கத்தினால் செய்யப்படுகின்ற கழுத்து ஆபரணங்களை அணிகின்ற பண்பு அருகியிருந்தது. பதிலாக அவர்கள் கால் விரல்களிலும், காதுகளிலுமே அணிகலன்களை அணிந்து வந்தனர். சிலவேளைகளில் செப்புத் தகடுகளினால் அட்சரக்கூடுகளை கழுத்தில் தொங்கவிடுவதும் மரபாக இருந்து வந்தது எனக் கூறலாம்.

கிறிஸ்தவ மதப் பரவலின் நிகழ்வினைத் தொடர்ந்து மேலைத்தேய வாழ்க்கை முறையில் அமைந்த ஆபரணங்களின் மாதிரிகள் யாழ்ப்பாணத் தமிழர் மத்தியில் பெரும் செல்வாக்கு பெற்றதைக் காணலாம். மேலைத்தேய ஆபரணங்களுள் முக்கியமானதாக விளங்கிய மோறா (Medallian) ஜிப்சி (Gyspy) மோதிரம், சங்கிலி (Chain) போன்றவற்றைக் குறிப்பிடலாம். மேலைத்தேய ஆபரணங்களுள் செதுக்கப்பட்ட வடிவங்களுள் பெருமளவிற்கு பறக்கின்ற தன்மை கொண்டனவாக உருவாக்கப்பட்டன. கிறிஸ்தவ மதச் செல்வாக்கின் காரணமாக சிலுவை உருவை ஆபரணங்களில் தீட்டுகின்ற ஒரு பண்பு யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டமையைக் காணலாம். அவ்வாறான ஆபரணங்கள் தங்கத்தினாலும் தங்கமல்லாத பிற உலோக பொருட்களினாலும் செய்யப்பட்டு மக்கள் மத்தியில் அணியும் வழக்கம் காணப்பட்டு இருந்தது.

மேலும் சமூக வாரியாக நோக்கும் போது மீன்பிடித்தொழிலைப் பிரதானமாகக் கொண்ட கரையோரங்களில் வாழ்கின்ற இந்துசமயத்தைச் சேர்ந்த பெண்கள் அணிகின்ற ஆபரணங்களின் தன்மையானது அதே தொழிலைச் செய்கின்ற கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த பெண்கள் அணிகின்ற ஆபரணங்களின் தன்மையில் இருந்து வேறுபட்டு அமைவதைக் காணலாம். உதாரணமாகக் குறிப்பிடுவதாமின் தொண்டமானாறு வல்வெட்டித்துறை, ஊறணி, பருத்தித்துறை, கற்கோவளம் ஆகிய பிராந்தியங்களைச் சேர்ந்த இந்து பரதகுலப்பெண்கள் அணிகின்ற தங்க ஆபரணங்கள் மிகவும் காத்திரம் மிக்கதாக விளங்குவதையும், பாஷையூர், நாவாந்துறை, மணியந்தோட்டம்



படிப்பகம்

www.padippakam.com

ஆகிய பிரதேசங்களில் வாழ்கின்ற கிறிஸ்தவப் பெண்கள் அணிகின்ற ஆபரணங்கள் மேலே கூறப்பட்ட வட மராட்சிப் பெண்கள் அணிவதைவிட கனதி குறைந்தனவாகவும் காணப் பட்டன. மேலும் இவர்கள் கறுப்பு நூலில் தங்கத்தினாலும், வெள்ளியினா லுமான சிலுவை உருவினை அணிந் தவர்களாகவும், இவர்கள் இந்துமதத் திலிருந்து கிறிஸ்தவத்திற்கு மதமாற் றப்பட்டவர்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது.

தீவுப் பகுதியைச் சார்ந்த பெண்கள் அணிகின்ற ஆபரணங்கள் ஏனைய பிராந்தியங்களில் இருந்து தன்மையி லும் கலைவனப்பிலும் வேறுபட்டு அமைவதனைக் காணலாம்.

தீவகமானது கலாச்சாரத்திலும் புவி யியல் அடிப்படையிலும் தனித்துவம் வாய்ந்த கூறாக விளங்கி வருவதற்கு ஏற்ப அணிகலன் தொடர்பான அமைப் பிலும், தன்மைகளிலும் தனித்துவம் வாய்ந்ததாக விளங்குவதைக் காண லாம். தீவகம் வாழ்மக்கள் மிகவும் சுறுசுறுப்பாக விளங்குவதைப் போல அவர்களுடைய ஆபணக் கலையிலும் அத் தன்மையை காணக்கூடியதாக உள்ளது. இங்கு வாழும் பெண்கள் தொங்குட்டான் அணிவதில்லை. மூக்குமின்னி பிரதானமான ஒரு அணி கலனாக உள்ளது. ஆபரணங்கள் பெருமளவிற்கு உடலோடு ஒட்டிக் கொண்டிருக்கிற வகையில் அணிந்து கொள்வதனைக் காணலாம்.



படிப்பகம்

www.padippakam.com

**The Goldsmiths (of Jaffna) are ingenious and excellent workmen and produce bangles, chains and rings whose execution is as fine as their designs are tasteful. Nothing is more interesting than to watch one of these primitive artists at his occupation seated in the open air, with no other apparatus than a few clumpsy tools, a blow pipe, and a chatty full of sand on which to light his charcoal fire.**

அத்தியாயம் நான்கு

**Many distinguished Europeans have taken away with them fine specimens of the work of the Jaffna handictaftman and among these the most distinguished is H.M. King Edward V11 who on his visit to ceylon in 1875 as H.R.H. the prince of wales graciously accepted some of the Finest jewelry enclosed in a Silver casket made by Jaffna goldsmiths under the special direction of Sir Wm. Twynam, then Government Agent. (A Hand Book of Jaffna Peninsula)**

## யாழ்ப்பாணக் குடாநாட்டில் பொற்றொழிலாளர்

யாழ்ப்பாண குடியிருப்பின் வரலாறானது மிகவும் தொன்மையாதாக விளங்குவதைப் போன்று ஆபரணத் தொழிலில் ஈடுபடும் ஒரு குறிப்பிட்ட இன மக்களின் வரலாறு மிகவும் தொன்மை வாய்ந்ததாக விளங்குவதைக் காணலாம். யாழ்ப்பாண குடியேற்றம் தொடர்பாக அறிஞர் மத்தியில் பல்வேறு கருத்து நிலைகள் நிலவினாலும் கூட



படிப்பகம்

www.padippakam.com

கிடைக்கப்பெற்ற ஆதாரங்களின்படி கைவினை தொழிலில் ஈடுபட்டோரது வாழ்க்கைமுறை இங்கு காலத்தால் மிக முற்பட்டதாக விளங்கியிருந்தது என்பதனை உறுதிப்படுத்தக்கூடியதாக உள்ளது. மக்கள் எல்லோருமே தாம் விரும்பிய வகையில் அணிகலன்களை அணிகின்றார்கள். ஆனால் தாம் அணிகின்ற அணிகலன்களை அவர்கள் தாமே செய்வதில்லை. பதிலாக ஒரு குறிப்பிட்ட பிரிவினரே, குறிப்பாக அத்தொழிலில் சிறப்புத்தேர்ச்சி பெற்ற வகுப்பினரே அவற்றினை உருவாக்கி அளிப்பதனைக் காணலாம். அந்த வகையில் அணிகலக்கலையில் ஈடுபடும் வகுப்பினரை பொதுவாக பொற்கொல்லர் என அழைக்கப்படுவதனைக் காண்கின்றோம். இக்குறிப்பிட்ட சிறப்புத் தேர்ச்சிபெற்ற வகுப்பினர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் குறிப்பிட்ட பிராந்தியங்களில் வாழ்ந்து கொண்டு வருகின்றமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் குடியிருப்பு பரம்பலில் பொற்கொல்லருடைய குடியிருப்பு பிரதேசங்களை நோக்கும் போது முக்கியமான சில பகுதிகளை அடையாளம் காணக்கூடியதாக உள்ளது. இவர்கள் பெருமளவிற்கு நகர அமைப்பைக்கொண்ட பகுதிகளிலேயே வாழ்ந்து கொண்டு வருவதனைக் காணலாம். வடமராட்சிப் பகுதியை எடுத்துக்கொண்டால், பருத்தித்துறை சிவன்கோயிலை அண்டிய பகுதியிலும் மந்திகையிலும் மாலுசந்தி ஆகிய மூன்று பிராந்தியங்களிலே அவர்கள் வாழ்ந்து கொண்டு வருவ தனைக் காணமுடிகிறது. மாலுசந்தியை அண்டிய அவர்களது குடியிருப்புப் பிராந்தியமே பிரதானமான அவர்களது சிறப்பு தேர்ச்சிக்குரிய பட்டறைகள் அமைந்துள்ள பகுதியின் மையமாக காணப்படுவது குறிப்பிடத்தக்கது. வடமராட்சிக்கு அப்பால் தென்மராட்சியை எடுத்து நோக்கும்போது இரண்டு பிரதான பகுதிகள் அவர்களது குடியிருப்பு மையங்களாக விளங்குவதனைக் காணலாம். ஒன்று சாவகச்சேரி நகரிற்கு அண்மித்ததாய் அமைந்துள்ள சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோயிலைச்சுற்றி உள்ள பகுதிகள், மற்றது யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணை, சிறப்பாக தட்டா தெருவும், கொக்குவில், கள்ளியங்காடு, செம்மணிவீதி, கட்டப்பிராய், அச்சுவேலி, மாம்பழச்சந்திக்கு அருகாமையில் உள்ள சிவியா தெரு, தெல்லிப்பளை ஆகிய பிராந்தியங்கள் என்பனவாகும். இங்கு குறிப்பிடக் கூடியளவிற்கு பொற்கொல்லர் வாழ்ந்து வருகின்றனர். இப்பிரதேசங்களுடனான இம் மக்களது வாழ்வும் தொழிலும் யாழ்ப்பாண மாநகரை அடிப்படையாகக் கொண்டதாகவும் கொழும்பு மாநகரில் உள்ள செட்டித் தெரு போன்ற வியாபார மையங்கள் இவர்களது சிறப்புத் தேர்ச்சியின் விற்பனை மையங்களாகவும் நீண்ட காலமாக விளங்கிவந்தமையைக் காண முடிகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பொற்கொல்லருடைய குடியிருப்பு மையங்களிற்கு எல்லாம் நடுநாயகமாக விளங்



படிப்பகம்

www.padippakam.com

குவது வண்ணார்ப்பண்ணை–தட்டா தெரு பிராந்தியமாகும். தென்னிந்தியா வில் இருந்து வந்த பொற்கொல்லரு டைய குடியிருப்புக்கள் பல இப்பகுதி யில் காணப்படுவதும் நகைத்தொழில் தொடர்பான தொழில் நுட்பமுறைகள் பல இப்பிராந்தியத்தில் இருந்து உரு வாகி அக்குறிப்பிட்ட சிறப்புத் தேர்ச்சி யின் வளர்ச்சியை முன்னெடுத்து சென் றமையைக் காணலாம். இதன் பின்ன ணியில் அமைந்து காணப்படும் செட் டிமாருடைய குடியிருப்பு நகைத் தொழில் தொடர்பான தொழில்நுட்ப முறையை வளர்த்தெடுத்த காரணியாக வுமுள்ளது. இம்மக்களது வாழ்க்கை முறைகளையும் அவர்களது தொழில் நடைமுறைகளையும் நோக்கும்போது பெருமளவிற்கு அவர்கள் தமது தொழிலை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பை தளரவிடாது பாதுகாத்து வந்தமையையும் காண லாம். இக்குடும்பங்கள் சிறப்பாக கல்வி யங்காடு, செம்மணி வீதியில் அமைந் துள்ள இவர்களது குடியிருப்புக்கள் தென்மராட்சியில் சங்கத்தானை, மீனாட் சியம்மன் கோயிலைச் சூழவாக உள்ள குடியிருப்புக்களும் நேரடியாக வட மராட்சியில் உள்ள பொற்றொழிலாளர் குடும்பங்களுடன் திருமண உறவு முறைகளை மேற்கொண்டு வருவ தனைக் காணலாம். ஆனால் வண் ணார்ப்பண்ணை–தட்டாதெரு பிராந்தி யதிலும், நாச்சிமார் கோயிலடியைச் சூழவுள்ள பகுதியில் செறிந்து வாழ் கின்ற பொற்கொல்லர் குடும்பத்தினர் மட்டக்களப்பிலுள்ள பெரிய கல்லாறு போன்ற பிரதேசங்களில் வாழுகின்ற பொற்கொல்லர் சமுதாயத்துடன் நேரடி யான திருமணத்தொடர்பு வைத்திருப் பதைக் காணலாம்.

யாழ்ப்பாண மாநகரிலுள்ள கஸ்தூரியார் வீதி இவர்களுடைய பிரதான தொழிற் களமாகவும் விற்பனை மையங்கள் அமைந்த பிரதான தெருவாகவும் விளங்குவதைக் காணலாம். கஸ்தூரி யார் வீதியானது யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சியில் பிரதானமான ஓர் அங்க மாக விளங்குவதனை எவருமே மறுக் கமுடியாது. அந்தவகையில் யாழ்ப் பாணத்தினுடைய பொருளாதார வளர்ச் சியின் ஓர் அங்கமாக விளங்கிவரும் தங்க அணிகல தொழிலானது மறு வளமாக யாழ்ப்பாணத்தவரின் கலாசார விழுமியங்களையும், கலை வெளிப்பாட் டின் இயல்புகளையும் ஒருங்கே கொண்டமைந்திருக்கும் பகுதியாகவும் காணப்படுகிறது. யாழ்ப்பாண நகரத் தின் வளர்ச்சியிலும் கஸ்தூரியார் வீதி மிக மிகப் பழமையானது என்பதனை பல்வேறு ஆதாரங்கள் மூலம் நிறு வலாம். எந்த ஒரு நகரத்தின் வளர்ச் சியிலும் அணிகலத் தொழில் மையங் களே அந்நகரங்களின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்து காணப்படு பவையாகும். இதற்கு சிறந்த ஒரு எடுத்துக்காட்டு தமிழ்நாட்டில் மதுரை மாநகரம் ஆகும். வெளிநாட்டவர்களுட னான தங்க ஆபரண வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களே ஒரு நகரத் தோற்றத்தின் பின்னணியாக அமைவ தனையும் காணலாம். யாழ்ப்பாண நகரத்தின் தோற்றத்தைப் பொறுத்த வரையிலும்கூட அராபியர், சீனர்



படிப்பகம்

www.padippakam.com

ஆகியோர் கிபி 8ம் நூற்றாண்டில் இருந்து தங்கம், விலைமதிப்பு மிக்க இரத்தினக்கற்களினதும் தங்க நகை ஆபரணங்களினதும் பட்டுவாடா நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருந்தமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. கிபி 8ம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் பாடிய திருப்புகழில் யாழ்ப்பாணாயன் பட்டின மேவிய பெருமாளே என்ற குறிப்பு இடம்பெறுவதில் இருந்து கிபி 8ம் நூற்றாண்டிற்கு முற்பட்ட நிலையில் இருந்தே யாழ்ப்பாணப் பட்டினத்தின் தோற்றத்தினை உறுதிப்படுத்தக்கூடியதாக உள்ளது. இதனை மேலும் உறுதிப்படுத்தக்கூடிய ஒரு சான்றாக கந்தரோடையில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கிபி 8ம் நூற்றாண்டுக்குரிய சாசனத்தில் பட்டினத்தில் இருந்து வந்தவர்களிற்கு என்ற தொடரமைந்திருப்பதனைக் காணலாம். எனவே யாழ்ப்பாண நகரத்தின் தோற்றம் எந்தளவிற்கு பழமையோ அந்தளவிற்கு கஸ்தூரியார் வீதியின் தோற்றத்தினை அம்மாட வீதியில் மேற்கொள்ளப்பட்ட தங்க அணிகலத் தொழிலின் பழமைத் தன்மையுடன் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடியதாக உள்ளது. இக்கருத்தினை ஏற்றுக் கொள்வோமாயின் யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் தங்க ஆபரண தொழிலின் பழமைத் தன்மையையும் அத்தொழிலில் ஈடுபட்டு வந்த குறிப்பிட்ட அச்சமூகத்தினரின் மிகப் பழமையான தன்மையையும் நன்கு உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறான ஒரு சமூகத் தோற்றப்பாட்டில் தங்க அணிகலன்களுடன் தொடர்பான பல்வேறு வியாபார முயற்சிகளில் உள்ளூர், வெளியூர் வாசிகள் ஈடுபட்டிருந்தனர் என்பதனை மறுப்பதற்கில்லை. நவீன ஐரோப்பிய வரலாற்றிலே யூதர்கள் எவ்வாறு ஜேர்மனிய நிலப்பரப்பிலே நகைகளை அடகுபிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தமை போன்று யாழ்ப்பாணத்தில் புராதன வரலாற்றில் இருந்து இற்றை வரை தங்க அணிகல அடகு தொழிலில் தமிழ் மக்கள் கூட்டாகவும் தனியாகவும் அதனை ஒரு தொழிலாக மேற்கொண்டு வருவதனைக் காண முடிகிறது. அவ்வாறு நகை அடகுத் தொழிலில் ஈடுபடுபவர் தங்க ஆபரணங்கள் பற்றிய தன்மைகளையும் இயல்புகளையும் நன்கு அறிந்த நிலையிலேயே மேற்கொண்டு வருவதனைக் காண முடிகிறது. தங்க ஆபரணங்களின் அசல் – நகல் பற்றிய அறிவில் பூரண தேர்ச்சி உடையவர்களாக அவர்கள் காணப்பட்டனர். தங்க ஆபரணங்களை கல்லில் உரைத்துப் பார்க்காமலே அவற்றின் இயல்புகளை கண்டறியும் அளவிற்கு எம்மவர் திறமை பெற்றிருப்பது அவ்வாபரணங் களோடு அவர்கள் நீண்டகாலப் பரீட்சையம் கொண்டவர்கள் என்பதனை எடுத்துக் காட்டுகிறது. குடாநாட்டில் உள்ள எந்த ஒரு பெண்மகளிடமும் தங்க நகையைக் கொடுத்தாலும் அவர் அதனை அசலா?, நகலா? என்று உடனே தெரிந்துகொள்வதில் இருந்து இக்கருத்தினை நன்கு உறுதி செய்து கொள்ளலாம்.

தமிழர் தம் வாழ்வில் நகைவியாபாரத் தொழிலில் மிகவும் புராதனம் வாய்ந்



படிப்பகம்

www.padippakam.com

தென்பதனை சோழப் பேரரசர்கள் கால உருத்திரமேரூர் சாசனங்களில் இருந்து உறுதிப்படுத்தக் கூடியதாக உள்ளது. அக்காலத்தில் உள்ளூராட்சிச் சபைகளுள் பொன்வாரியம் என்ற ஒரு சபையினரை தெரிவுசெய்து பொற்றொழில் தொடர்பான நடவடிக்கைக ளைச் சீர் செய்தமையினை உருத்திர மேரூர் கல்வெட்டுக்கள் வியவஸ்த்தை செய்து நிற்கின்றன. எனவே தமிழர் மரபில் தங்க ஆபரணத்தொழில் மிக மிக பழமையானது என்பதனை எல்லாச் சான்றுகளின் அடிப்படையிலும் நிலைநிறுத்த முடிவது என்பது இத் தொழிலோடு சம்பந்தமுடைய சமூகத் தவரின் பழமையான தன்மையை எடுத்துக்காட்ட உதவுவதாகக்கொள்ளலாம். அவ்வகையில் யாழ்ப்பாண மாநகரின் கஸ்தூரி வீதியார் மிகவும் புராதன காலத்தில் இருந்தே நகைத் தொழிலில் அதன் கலைவனப்பில் ஈடுபட்டு வந்திருக்கின்றார்கள் எனக் கொள்ள முடிகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் கண் வாழ்ந்து வருகின்ற நகைத்தொழிலில் ஈடுபட்ட இச் சமூகத்தினர் பின்பற்றி வந்த தொழில்நுட்ப உத்திகளை அவதானிக்கும்பொழுது நாம் இரண்டு பிரதான அம்சங்களை குறிப்பிட முடிகின்றது. ஒன்று பாரம்பரியமாக அவர்கள் பின்பற்றி வந்த நகைத் தொழில் தொடர்பாக கலைநுட்பமுறை இரண்டாவது நவீன சமூக வாழ்வில் மாறி வரும் இயந்திரவியல் வாழ்க்கையின் பலனாக ஏற்பட்ட கலைநுட்பம் என்பவையாகும். இன்றைய நிலையில் இந்த இரண்டு வகையான கலை நுட்பங்களும் யாழ்ப்பாணத் தமிழ் பெண்கள் அணியும் அணிகலன்களில் செல்வாக்குச் செலுத்துகின்ற அம்சங்களாக இருப்பதனைக் காணலாம்.

பாரம்பரியக் கலைமரபு என்று கூறுகின்றபொழுது அவை பெருமளவிற்கு தென்னிந்திய கலைமரபுகளைப் பின்பற்றியதன் அடிப்படையில் இந்து தெய்வ உருவங்களைத் தங்க நகைகளிலே உருவகித்து அணிகின்ற தன்மையைக் குறிப்பிடலாம். தென்னிந்தியக் கலைவடிவங்களின் வெளிப்பாடானது தெய்வீகவியல் பொருந்தியதன் அடிப்படையில் கலையாக்கங்கங்கள் யாவும் முதலில் தெய்வங்களுக்கே அர்ப்பணிக்கப்படுவதைக் காணலாம். இக்கருத்திற்கு ஏற்ப தங்க ஆபரணத் தொழில் கூட வளர்ச்சியடைந்து வந்தது. முதலில் தெய்வங்களிற்கு அணிகலன்களை அணிகின்ற பழமையான புராதன மரபு காலப்போக்கில் மன்னர், பிரதானிகள் மற்றும் அந்தஸ்தில் கூடிய மக்கள் ஆகியோர் அணிகின்ற வழக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டு அதன்பின்னர் பொருளாதார வளமுள்ள மக்கள் அனைவருமே அணிகின்ற ஒரு பொதுமரபொன்று உருவாக்கப்பட்டது. இது தங்க ஆபரணக்கலைத் தொழிலில் ஏற்பட்டு வந்த பிரதானமான வளர்ச்சியும் மாற்றமுமாகும். இந்நிலையில் அத் தெய்வீக கலையம்சம் சார்ந்த கலைத் தொழிலில் பாரம்பரியமான கலைப் பண்புகள் பின்பற்றப்பட்டமையைக் காணலாம். அவ்வாறு தெய்வீகத்தன்மைகள் வெளிப்படுமாறு தங்க ஆபரணங்களில்



படிப்பகம்

www.padippakam.com

அத் தெய்வங்களது உருவங்களை பதிப்பித்து அணிந்துகொள்கின்ற மரபு ஆரம்பத்தில் தோற்றம் பெற்றிருந்தமையைக் காணலாம். இத்தெய்வீகத் தன்மைகள் கூடுதலாக பிரதிபலிக்குமாறு தங்க ஆபரணங்களை உருவாக்கி அளித்ததன் பின்னணி ஏற்கனவே குறிப்பிட்டது போன்று அவை தெய்வங்களுக்குரிய ஆபரணங்களாகவே கருதப்பட்டதென்பதாகும். அவை பின்னர் மனிதர்களால் அணியப்படும் பொழுது தெய்வங்களுடைய நிந்தனைகளில் இருந்து விடுதலை அல்லது தப்பித்துக்கொள்வதற்காக அத்தெய்வங்களை அவற்றின் குறியீடுகளை ஆபரணங்களில் இருத்தி அணிந்துகொள்கின்ற தன்மை உருவாக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தவரின் ஆரம்பகால மார்புப் பதக்கங்களை எடுத்துக்கொண்டால் அப் பதக்கங்களின் முக்கிய சின்னமாக கஜலக்சுமியினுடைய உருவம் பதிப்பிக்கப்பட்டமையைக் காணலாம். இது மார்புப் பதக்கம் என்ற ஆபரணத்தின் விசேட இயல்புகளாகவும் இற்றைவரை பொற்கொல்லரினால் பின்பற்றப்பட்டுக் கொண்டுவருவதனைக் காணலாம். ஒருவேளை கஜலக் சுமியினுடைய உருவ அமைதி அம் மார்புப் பதக்கத்தினை வடிவமைப்பு செய்வதற்கு பொருத்தமாக இருந்ததனாற்போலும் அத்தெய்வத்தினுடைய உருவம் பதக்கத்திற்குரிய வடிவமாக தொடர்ந்து இருந்து கொண்டு இருப்பதனைக் காணலாம். பாரம்பரிய கலைப் பண்புகள் தொடர்ந்து குறிப்பிட்ட சில ஆபரணங்களை பயன்படுத்துவதற்கு எடுத்துக் காட்டாக சூரியபிறை, சந்திரபிறை என்பவற்றைக் கூறலாம். இதில் சூரிய பிறை—இடப்பக்கத் தலையின் பக்கத்திலும் சந்திரபிறை—வலப்பக்கம் அணிகின்ற தன்மையைக் காணலாம். இக் கருத்தானது சந்திராதித்தவத் என்ற வடமொழி சுலோகத்திற்கமைய சந்திரர், சூரியர் உள்ள வரைக்கும் வாழ்வு நிலைப்பதாக அல்லது சந்திர சூரியர்களது அருள் கிடைப்பதாக என்ற கருத்துப்பட நிற்பதனைக் காண்லாம். தலையில் அணிகின்ற நெற்றிவரி, உச்சிவரி, றாக்கொடி, தாழிம்பூ, சடைநாகம், கொண்டைப்பூ ஆகியன பாரம்பரிய கலை ஆபரணங்களாக (யாழ்ப்பாணத்து தமிழ்ப் பெண்கள் விரும்பி) பழையகாலம் முதல் அணியப்பட்டுக் கொண்டு இருப்பனவாகக் காணப்படுகின்றன. இவற்றுள் சடைநாகம் என்ற அணிகலன் அதிமுக்கியத்துவம் வாய்ந்த தலை அலங்காரத்திற்குரிய அணிகலனாக விளங்குவதையும் காணலாம். யாழ்ப்பாணத்தின் சில பிரதேசங்களில் சடைநாகம் என்பது நாக சடை எனவும் பின்முன்னாக உருபு மாற்றி கூறப்படுவதனையும் காணலாம். கொண்டைப்பூ என்ற அணிகலனானது யாழ்ப்பாணத்தவரின் காலத்தால் முற்பட்ட அணிகலனாக விளங்கிவருவதனைக் காணலாம். கந்தரோடையிலும் இதன் புராதன வடிவங்கள் இன்று வரை நிலவுவதனைக்காண முடிகிறது. யாழ்ப்பாணத்திலுள்ள பாரம்பரிய அணிகலன்களை உருவாக்குகின்ற பொற்கொல்லர்கள் தனித்துவமான முறையில் வேறுபல தங்க அணிகலன்களையும் பாரம்பரியமாக உருவாக்கி



படிப்பகம்

www.padippakam.com

வந்துள்ளனர். அவற்றில் சிலவற்றை பின்னிணைப்பு 1இல் கோட்டுவரை படங்களினூடாக நோக்கலாம். இத் தனித்துவமான ஆபரணங்களின் செய் முறையில் யாழ்ப்பாணத்திற்குரிய தொழிற்திறன் வெளிப்படுத்தப்பட்டு நின் றாலும்கூட அதன் வடிவமைப்பில் பெருமளவுக்குக் தமிழகத்து திருநெல் வேலி மாவட்டத்திலுள்ள பெண்கள் அணியும் ஆபரணங்களை ஒத்து இருப்பதனையும் அவதானிக்க முடிகி றது. ஒரு வேளை தூத்துக்குடியி னூடாகவும் கேரளம் ஊடாகவும் யாழ்ப் பாணத்தவர் நெருக்கமான முறையில் கொண்டிருந்த வர்த்தகத் தொடர்புகள் இத்தகைய ஆபரணக்கலையின் கலை ரீதியான ஒப்புமுறைக்கு அடிப்படை யாக விளங்கியிருந்திருக்கக் கூடும். பொற்கொல்லர்கள் கூட இத்துறைகள் ஊடாக தமது முயற்சிகளை மேற் கொண்டிருந்தமையால் இவ் இரு பிராந்தியங்களுக்கும் இடையே ஆபர ணக்கலை தொடர்பான பொதுவியல்பு களும் பல சிறப்பியல்களும் ஏற்படக் காரணமாயிற்று.



படிப்பகம்

www.padippakam.com

அத்தியாயம் ஐந்து

# பெண்களின் அணிகலன்களும் நம்பிக்கைகள் – மரபுகளும்

நாகதீப நங்கையர் தம் வாழ்வில் பின் பற்றியிருந்திருக்கக்கூடிய சடங்குகள், மங்கள விழாக்கள் போன்றவற்றில் அணிகலன்களை பிரதானமான ஓர் அம்சமாகக்கொண்டு தமது பண்பாட்டின் தனித்துவத்தினை வெளிப்படுத்தி இருந்தனர். நாகதீபத்தின் பண்பாட்டு வெளிப்பாட்டில் அணிகலன்கள் நிவேதனப் பொருட்களாகவும், செல்வத்தின் சேகரிப்புக்களாகவும், போகத்தின் குறிகாட்டியாகவும், நோய்–பிணி தீர்க்கும் அருமருந்தாகவும் பயன்படுத்தப்பட்டு வந்திருந்த அதே வேளையில் நுண் கலை வளர்ச்சியின் ஓரம்சமாக அழகியலுணர்வின் பாற்பட்டதொன்றாகவும் உணரப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்தமையைக் காண்கின்றோம். இப்பின்னணியில் வெள்ளி, தங்க, செம்பு உலோகங்கள் வெளியேயிருந்து குடாநாட்டிற்குள் கொண்டுவரப்பட்டு அணிகலன்களின் உருவாக்கத்திற்காக தொன்றுதொட்டு பயன்படுத்தப்பட்டு வந்தமையைக் காணமுடிகின்றது. கிறிஸ்துவிற்கு முன் 6ம் நூற்றாண்டிலிருந்தே இக்குடாநாட்டில் வெள்ளிக்கட்டிகளை பயன்படுத்தி அணிகலன்கள் உருவாக்கப்பட்டிருந்தன என்பதனை அண்மைக்காலத் தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. தொடக்கத்திலிருந்தே இக்குடாநாட்டின் கண் ஒருவித மத–நம்பிக்கைகளினூடான அணிகலன்களின் உபயோகம் அறியப்பட்டிருந்தது என்பதனையும் அண்மைக் காலத்தில் கிடைத்த தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

## சமயமும் அணிகலன்களும்

அணிகலன்களின் உபயோகதேவையை முதன்முதலாக பலியோலிதிக் யுகத்தின் இறுதிக்கட்டத்தில் வாழ்ந்த மனிதக் குழுவினரால் நன்கு உணரப்பட்டிருந் தமையை தொல்லியற்சான்றுகள் எடுத் துக் காட்டுகின்றன. உலகிலே குரோ மக்னன் என்ற மனிதகுலக் குழுவே அணிகலன்களை முதன் முதலாக அணிந்து–சடங்குகளை ஆற்றியிருந்த முறைமையை மனித பரிணாம வர லாறு எமக்கு காட்டுகின்றது. கி.மு. 70,000 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த அக்குழுவினரால் பயன்படுத் தப்பட்ட பல்–தந்தம்–எலும்பினாலான அணிகலன்கள் பற்றிய தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன. ஆனால் கி.மு. 5000 வருடங்களிலிருந்தே வெள்ளி, செம்பு, தங்க உலோகங்களா லான அணிகலன்கள் பல்துறைப்பட்ட முறையில் முக்கியத்துவம் வாய்ந் ததாக கருதப்பட்டு மனித இனத்தின் பயன்பாட்டிற்கு வந்திருந்தன. சிந்து வெளிப் பள்ளத்தாக்கிற் கிடைத்தவை யும் இப்பின்னணியிலேயே வைத்து ஆராயப்படுகின்றன. கி.மு.1000ம் ஆண் டிற்கும் சற்று பிற்பட்ட காலத்திற்கு ரியதான ஆதிச்ச நல்லூர் வெண்கலத் தாய்த் தெய்வத்தில் காணப்பட்ட அணிகலன்களின் புடைப்பு அமைப்பே தென்நாட்டில் கிடைத்த காலத்தால் முற்பட்டசான்றுகளாக உள்ளன. கழுத் தில் இறுக்கமாக அணிந்துள்ள ஒரு தாயத்தும், இடுப்பிலுள்ள அச்சரக் கூடுமே அவ்வுருவத்தில் வெளிப்பட் டுள்ள அணிகலன்களாக உள்ளன. அண்மைக்கால அகழ்வாய்வுச் சான்று களுள் யாழ்ப்பாணத்தின் புராதன அணிகலமான ஆனைக்கோட்டையிற் கிடைத்த முத்திரைக்காப்பு அரசும் மதமும் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப் பட்டிருந்த முறையினை வெளிப்படுத் துகின்றது. 1980ம் ஆண்டில் பேராசிரி யர் இந்திரபாலாவின் தலைமையில் ஆனைக்கோட்டையிலுள்ள கரையாம் பிட்டி என்ற மையத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையி னர் மேற்கொண்ட அகழ்வின் போது செம்பிலான அம்முத்திரையுடன் கூடிய காப்பு எமக்குக் கிடைத்தது. கி.மு. 2ம்/1ம் நூற்றாண்டுக்குரிய தமிழ்ப்பிராமி வரிவடிவத்தில் கோவேதம்/ கோவேதன் என்ற வாசகத்துடனான அக்காப்பு ஒரு மனித எலும்புக்கூட்டின் தலைப் பாகத்தில் கறுப்பு வர்ண மட்பாண்டம் ஒன்றினுள் வைக்கப்பட்டிருந்தமையை இந்நூலாசிரியரே அகழ்ந்து வெளிப் படுத்தினார். அவ்வகையில் ஒருசடங்கு முறையின் அடிப்படையிலேயே அம் முத்திரைக்காப்பு அங்கு பேணப்பட்டி ருந்தது என்பது தெளிவாகியுள்ளது. புத்தளத்திலுள்ள பொன்பரிப்பு என்ற பெருங்கற்கால சவஅடக்க மையத்திலி ருந்து (Burial K Trench 27/80,Lot 7) செம்பினாலான மார்புப் பதக்கம் ஒன்று (Copper Bracelet) கண்டுபிடிக்கப்பட் டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக் கதாகும். கந்தரோடையில் இருந்து கிடைத்த பெருந்தொகையான அணி கலன்களுள் சில மத ரீதியானவையாக வும், பெரும்பாலானவை மக்களது



படிப்பகம்

www.padippakam.com

வாழ்வியற் தேவைகளுடன் சம்பந்தப் பட்டவை என்பதையும்கண்டு கொள்ள முடிகிறது. அண்மையில் இங்கிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நவரத்தின மணியொன்றில்(சந்திர காந்தக் கல்லில்) வலப்புறம் நோக்கிய ஓர் ரிஷபத்தின் படுத்திருக்கும் வகையிலான உருவத் தினைத்தாங்கிய சான்று இந் நூலாசிரி யரினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த ரிஷப வடிவம் நல்லூரை இரா தானியாகக் கொண்டு ஆட்சி செய்த ஆரியச் சக்கரவர்த்திகளால் வெளியிடப் பட்ட சேது நாணயத்தில் உள்ள ரிஷபத்தினை பெரிதும் ஒத்துள்ளது. மேலும் மத்திய காலத்திற்குரிய வெண் கலப் பதக்கமொன்று ஹனுமானின் ஆபரணப் பொலிவுடனான தோற்றத் தினை அதன் மையத்தில் தாங்கிய நிலையில் கந்தரோடையிலிருந்து கண் டெடுக்கப்பட்டுள்ளது. இப்பதக்கத்தின் மேற்பகுதி ஐந்து தலை நாகத்தின் சிரத்தினைக் கொண்டதாக அமைக்கப் பட்டுள்ளது. இரு துவாரங்கள் அச் சிரத்தில் காணப்படுவதிலிருந்து அது பதக்கமாக அணியப்பட்டிருந்தது என் பதும் தெளிவாகிறது. மேலும் நல் லூரில் பண்டாரக் குளத்தடியில் உள்ள ஒரு மண்படையில் இருந்து(இரா?) மோதிரமொன்று கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. இம் மோதிரத்தில் சிவப்பு நிறக்கற்கள் பதித்து இருந்தமைக்கான சான்று காணப்படுகிறது. 13 சிவப்பு வர்ணக்கற்கள் பதித்திருந்தமைக்கான துவாரங்களுடன் காணப்படுவது அதன் சிறப்பியல்பாகவுள்ளது. எனவே மேலே கூறப்பட்ட இச்சான்றுகள் இப் பிராந்தியத்து ஆபரணக் கலையானது தொடக்கத்தில் கோன்மை—கோவிலுடன் கொண்டிருக்கக் கூடிய நெருங்கிய தொடர்பினையடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெற்றுச் சென்றது என்பத னையே உறுதிப்படுத்தியுள்ளது எனக் குறிப்பிட முடியும். வடமராட்சியிலுள்ள மாயக்கை என்ற ஊரில் இன்றுவரை நிலைத்திருக்கும் மரபுக் கதை ஒன்று இப்பிராந்தியத்தில் அணிகலன்கள் பற்றி யதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. அக்கதைபின்வருமாறு:

*"மாயக்குகை என்ற மிகநீண்ட குகை பரப்பின் முகப்பிலே பரந்து விரிந்த நெல் வயல்களும் காய்கறித் தோட்டங்களும் செழித்திருந்த அக்கா லத்தில் மாட்டு மந்தைக் கூட்டம் ஒன்று இரவு நேரத்தில் வந்து மேய்ந்து பயிர்களை அழித்துவிட்டுச் செல்வது மரபாக இருந்துவந்தது. இதனால் விரக்தியுற்ற வயற்காரன் இராக்காலங்களில் தனது நெற்பயிரை பாதுகாப்பதற்காக அட்டாளை அமைத்து அதற்குள்ளிருந்து காவல் தொழிலை மேற்கொண்டு வந்தான். ஒருநாள் நள்ளிரவு நேரம் வயற்பரப்பு நடுவிலே ஒரு தொகுதி மாட்டுமந்தை நெற்பயிரை மேய்ந்து கொண்டிப்பத னைக் கண்டஅம்மனிதன் அவற்றை விரட்டிச் சென்றான். அப்பொழுது அவை யாவும் அக்குகை வாயிலி னூடாக உட்சென்றதைக்கண்ட அவ் விவசாயி தொடர்ந்தும் அம்மாடு களுக்குப் பின்னே அக்குகைக்குள் விரட்டிச் சென்றான். நீண்ட தூரம் சென்றதும் மாடுகள் மறைந்து விட் டமையை அவன் உணர்ந்தான். அதன்பின் குகையின் உட்பரப்பிலே*



படிப்பகம்

www.padippakam.com

*பிரகாசமான ஒளி வருவதனை அவ தானித்து அவ்விடத்திற்குச் சென்று பார்த்தான். அங்கு பல்வகையான அணிகலன்களும், நவரத்தின மாலை களும், மணிகளும் நிறைந்திருந்த மையைக் கண்டான். ஆனால் அடுத் தகணம் மாய மனிதரினால் சூழப்பட்ட நிலையில் அவ்விவசாயி அக்குகை யினுள் சபிக்கப்பட்டு குகை வாயிலின் முன் பலவந்தமாகக் கொணர்ந்து விடப்பட்டான். அதன்பின்னர் அவ்விவ சாயி தனது வயற்பரப்பிற்கு இராக் காவல் செய்வதனையும் தவிர்த்துக் கொண்டான்."*

இவ்வாறு அம்மாயக் குகையினுள் மணிகளையும் ஆபரணங்களையும் அவ்வயற்காரன் கண்டமையின் பின்ன ணியில் அக்குகைக்கு மாயக்குகை என்ற கதை இடுகுறிப்பெயர் உரு வாயிற்று என்பர் அவ்வூர் மக்கள். மயன் அல்லது மாயன் என்ற பெயர் கலைஞன் அல்லது ஆபரண–கட்டிட கலைத்துறையில் சிறந்து விளங்கும் புகழ்பெற்ற ஒருவனுக்கே வழங்குவதா கும். அப்பின்னணியில் மயன் குகை அல்லது மாயன்குகை என்பதே காலப் போக்கில் திரிபடைந்து மாயக்குகை என்றாகி இன்று மாயக்கை என வழங் குகிறது எனலாம். மாயக்கையை மருவி அமைந்துள்ள தம்பசெட்டி – வியாபாரிமூலைப் பகுதிகளிலேயே மிகப் பழமையான தங்க ஆபரணங்கள் இன்று வரை காணப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. பாரம்பரிய ஆபரண–அணிகலத்தொழில்முறைகள் இப் பிராந்தியத்தில் முன்பு செழிப் புற்றிருந்தமையையே இக்கதை மரபு இங்கு குறிப்பிட்டுள்ளது எனக்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்த வரையில் சமயச்சடங்குகள் நம்பிக்கை –மரபுகளின்பாற்பட்ட அணிகலன்களை அணிவிக்கும் முறையை குழந்தைப் பருவத்தினர் மட்டத்தில் தாராளமாக கண்டுகொள்ளமுடிகிறது. ஆண்மகவு –பெண்மகவு, பிறப்பு–இறப்பு பற்றிய அறிதல்–அறிவிக்கப்படும் முறைகள் கூட பாரம்பரிய அணிகலன்களினூ டாகவே நிகழ்ந்துவருவதனை கண்டு கொள்ள முடிகின்றது. ஆண்மகவு அவதரித்து விட்டால் பொன்வடமும் கிட்டிக்கமிறும், பெண்மகவு ஜென னித்துவிட்டால் விளக்குமாறும் வேப் பிலையும் எடுத்து வைத்து பிறப்பின் வகையை உணர்த்தும் நடை முறையை யாழ்ப்பாணத்திலுள்ள சில கிராமங்களில் இன்றும் காணலாம். பிறந்த மகவு இருபாலாருக்கும் வெட் டக்காசு வெண்துணியில் வைத்து, நேர்த்திசெய்து கையில் கட்டிவிடுவ தும் மரபாக உள்ளது. இம்முறையை அராலி, வட்டுக்கோட்டை, பருத்தித் துறை, தும்பளை, வியாபாரிமூலை ஆகிய இடங்களில் இன்றும் காண முடிகின்றது.

குழந்தை ஜனனமாகி 21ம் நாள் அல்லது 31ம் நாள் நாண்பூட்டு வைபவம் நிகழும். கனகமணியில் கைகள் இரண்டிற்கும் தண்டை வளையங்களும் கழுத்தில் ஐம்படைத் தாலியும் அணிவிக்கப்படும். ஐம்படைத்



படிப்பகம்

www.padippakam.com

தாலி என்பது வேல், சூலம் கெண்டை, தண்டை, சங்கு, சக்கரம் ஆகியன ஒரு வட்டத்தினுள் அமையக்கொண்டிருப்பதாகும். இவற்றை *ஐம்படைத்தாலி* அல்லது *பஞ்சாயுதங்கள்* என்பர். ஐம்படைத்தாலியின் முக்கியத்துவம் சமய அடிப்படையைக் கொண்டதாகும். பிறரின் கண்ணூறு முதலிய விரக்திப் பார்வை–ஏக்கப்பார் வைக்குட்படும் நிலையினால் ஏற்படும் தீங்கினை நிவர்த்திக்கும் நோக்கத்திற்காகவே குழந்தைகளுக்கு பஞ்சாயுதம் அணிவிக்கப்படுகின்ற முறையை யாழ்ப்பாணத்தவர் இற்றை வரைக்கும் பின்பற்றுகின்றனர்.இதனை விட குழந்தைகளின் காய்ந்த தொப்பூள் கொடியை வெள்ளியிலான ஒரு கூட்டிற்குள் (உருளை வடிவிலான அட்சரக்கூடுகளின்கண்) இட்டு குழந்தைகளின் இடுப்பிலுள்ள அரைஞாண் கொடியில் வைத்து இணைத்து விடுகின்ற மரபும் காணப்படுகின்றது. மாலை–மைம்மல் பொழுதின் போது குழந்தைகளை வெளியே அழைத்துச் செல்வதற்குரிய பாதுகாப்பு ஆயுதமாக அட்சரக்கூடு கருதப்பட்டு அணிவிக்கப்படும் மரபு இற்றைவரைக்கும் உள்ளது.

சதங்கையும் கழலையும் குழந்தையின் மழலையை மெருகுபடுத்துவதற்காக அணிவிக்கப்படுகின்றமையை இங்கும் காணலாம். கண்டக்கழல், வீரக்கழல் என்ற இருவகையான அணிகலன்கள் உள. அரச் குடும்பத்திலுள்ள குழந்தைகளுக்கு வீரக்கழல் அணிவிக்கப்படும் மரபு பொதுவானது. வலிகாமத்தில் பண்ணாகம், சித்தன்கேணி, வழக்கம்பரை, சோழியபுரம் ஆகிய இடங்களில் உள்ள குழந்தைகளுக்கு கண்டக்கழலை அணிவது மரபாக உள்ளது. குழந்தைகளின் மிடற்றுப் பாகத்து நரம்புகள் புடைக்காதிருக்கவும், கண்டசுரம் (குரல்வளை அடைப்பு) போன்ற குறைபாட்டினைப் போக்குவதற்காவுமே கண்டக்கழலை அணிவது மரபாக உள்ளது.

குடாநாட்டு கடற்கரையோரத்து மழலைகள் அணியும் அணிகலன்கள் தனித்துவமான இயல்பினைக் கொண்டிருக்கின்றன. கரையோரப் பரப்பிற் கிடைக்கும் பெறுமதிமிக்க சங்கு–சிப்பி–சோகி–முத்து–கடற்பவளம் முதலானவற்றை இணைத்த வகையில் அம் மழலைகள் அணிகலன்களை அணிகின்ற மரபு காணப்படுகின்றது. சோகிமாலைகள் சங்குக் காப்புகள் என்பன மிகப் பிரதானமான அணிகலன்களாகும். ஆமையோட்டிலிருந்து செய்யப்படுகின்ற அணிகலன்கள்கூட குறிப்பிடத்தக்கவை. வலம்புரிச்சங்கின் ஊர் பருவம் கழுத்துச் சங்கிலியில் தொங்கும் பதக்கங்களாயின. கடற்கரையோரச் சிறார்கள் பெருமளவிற்குக் தாயத்துக்கள் அணிந்திருப்பதற்கான காரணிகளுள் கிறிஸ்தவ–கத்தோலிக்க மதப் பின்னணியும் ஒன்றெனலாம். கொம்புச் சுறாவின் முள்ளெலும்பு அணிகலன்களுக்குரிய உள்ளீடாக விளங்கி வந்திருக்கின்றன. தாயத்தாக அணியப்படுவதும் அம்முள்ளெலும்பாகும். சிந்து சமவெளிப் பள்ளத்தாக்கு வாழ்விலிருந்து–பெருங்கற்கால மரபுகளினூடாக



படிப்பகம்

www.padippakam.com

எமக்குக் கிடைத்த தாயத்து வழக்கம் இதுவாகும். கந்தரோடையிலிருந்தும் ஆனைக்கோட்டையிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட செய் கருவிகளுள் (Artifacts) சுறாவின் முள்ளெலும்பிலிருந்து உருவாக்கப்பட்ட அணிகலன்கள் அதிகமாகக் கிடைத்துள்ளன. சமுத்திரவியற் பண்பாடு அணிகலன்களின் முறையில் ஏற்படுத்தியுள்ள செல்வாக்கிற்குச் சிறந்த எடுத்துக் காட்டு இதுவாகும்.

சங்குப்பல் கட்டுதல், கடற்பாசியை உலரவைத்து, அட்சரக்கூட்டினுள் வைத்து அணிதல், மானுளுவைச் சுறாவின் தோலை பதப்படுத்தி இடுப்புப் பட்டியாக அணிதல், கடற்குதிரையின் வஸ்து மருந்தாக பயன்படுத்துதல் போன்றன சமுத்திரவியல் வழி வந்த செல்வாக்கின் விளைவுகளே. மதுரை மீனாட்சியம்மனின் உடுப்புக் கவசம் – கேசகவசம் என்பன கடல் முத்தினால் ஆக்கப்பட்டிருப்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

## அணிகலன்களும் நோய் ஏர்ப்புச் சக்தியும்

உடலியல் அடிப்படையிலான நரம்புகளின் சீரான இயக்க முறைக்கும் அணிகலன்களுக்குமிடையே நெருங்கிய தொடர்புகள் இருந்து கொண்டு இருப்பதனை பல வைத்திய மரபுகள் எமக்கு எடுத்துக்காட்டியுள்ளன. கழுத்திலுள்ள இருபக்க நரம்புகள், மணிக்கட்டிலுள்ள உயிர்நாடி நரம்புகள், கணுக்காலில் உள்ள நரம்புகள், இடுப்பிலுள்ள நரம்புத்தொகுதி, மூக்கினதும், காதினதும் நரம்புத்தொகுதி என்பன மிக இலகுவாக பல்வேறுபட்ட உலோகங்களினால் உருவாக்கப்படும் அணிகலன்களின் ஈர்ப்புச்சக்திக்கும் அதனூடான கதிரியக்க தொழிற்பாட்டிற்கும் உட்படுகின்றன. நரம்பு மண்டலத்திற்கும் சூரிய ஒளித்தொகுதிக்குமிடையே ஏற்படும் தொடர்புகளை சீராக்குவதற்கு பல்வேறு உலோகங்களினாலான அணியும் அணிகலன்கள்(as an Antenna for T.V) உதவிநிற்கின்றன. மூளையில் கோளாறு உள்ளவர்களுக்கு மணிக்கட்டில் செப்பு உலோகத்துண்டும் விரல்களில் வெள்ளியினாலான மோதிரமும் அணிவது மரபு. இதேபோன்று காக்காய் வலிப்பு வருபவர்களுக்கு இரும்பினாலான அணிகலன்களை கையில் அணிவது மரபாக உள்ளது.

குழந்தைகளின் வாழ்வில் ஏற்படும் நோய்களுக்கெல்லாம் அணிகலன்களும் மருத்துவப் பொருளாக கணிக்கப்பட்டு அணிவிக்கப்பட்டமையைக் காணலாம். பொன்னுக்குவீங்கி என்ற நோய் (கண்டக்கழலை) கண்டவுடன் குழந்தைகளுக்கு கழுத்தில் இரட்டை வடத் தங்கச் சங்கிலியும் கையில் செப்புக்காப்பும் அணிவிப்பது பெற்றோர்களது மரபாக இருந்து வருகின்றது. பொற்றொழிலாளர் பயன்படுத்தும் தீச்சட்டிக்கருகிலிருக்கும் தண்ணீரைக் கொணர்ந்து இந்நோய் கண்ட இடத்தில் பூசிவிடுவதும் மரபாக இருந்து வருகிறது.



படிப்பகம்

www.padippakam.com

குழந்தைகளுக்கு ஏற்படும் குக்கல் நோய்க்குரிய அருமருந்தாக கழுத்தில் புங்கங்காயும் புலித்தோலும் இணைத் துக்கட்டுகின்ற மரபும் இருந்து வரு கின்றது. புங்கங்காய் விதை நன்றாக உலர்ந்த பின்னர் கழுத்தில் மாலைக ளாகவும் பயன்படுத்தப்படுகின்றன. ஐம் பொன் சேர்க்கப்பட்ட தகடும் இந் நோயைக் குணமாக்குவதன் பொருட்டு கழுத்தில் நூலிழையில் கோர்த்து தொங்கவிடுவதும் மரபாக இருந்து வருகின்றது.

பொதுவாகப் பெண்களுக்கு காது குத்துதல், மூக்குத்தி அணிவித்தல் ஆகிய வைபவம் அடிப்படையில் முறையே கேட்கும் சக்தியை அதிகரிப் பதற்காகவும் நாசித் துவாரத்தினூடே உட்செல்லும் பிராணவாயுவை சுத்தி கரிக்கும் நோக்கத்திற்காகவுமே அவ் வாறு செய்யப்பட்டது. தங்க மூக் குத்தியின் உட்பக்கச் சுரை செப்பாணி யில் செய்யப்படுவதற்கான நோக்கம் காற்றில் உள்ள அழுக்கான துணிக் கைகளை செப்புச்சுரை ஈர்த்து தன்னி டத்தே ஒன்றுசேர்த்து வைத்திருக்கும் என்ற அடிப்படையாகும். இத்தகைய மருத்துவப் பின்னணியை மறை பொருளாகக் கொண்டு மூக்குத்தி அணிவதற்கான காரணிகளை எம் முன்னோர் நம்பிக்கை – மரபுகளுடன் இணைத்து வழங்கினர். பூப்படைந்த நாள்முதல் கன்னி ஒருத்தி வலது மூக்கில் ஒற்றைக்கல் சிவப்பு வர்ண மூக்குத்தியை அணியவேண்டுமென கற்பிக்கப்பட்டாள். ஒற்றைக்கல் சிவப்பு வர்ண மூக்குத்தி அப்பெண் குடும்ப வாழ்விற்கு தயாராகிவிட்டாள் என்ற கருத்தினையும் மறை பொருளாகக் கொண்டுள்ளது என்பர். திருமணமான பெண்கள் இடதுபுற மூக்கில் பேசரி/ பேசாரி மூக்குத்தியை அணிய வேண் டுமென கற்பிக்கப்பட்டது. வட்ட வடி வான பேசாரி அதன் மையத்தில் சூரிய –சந்திரர்– நட்சத்திரர் வடி வங்களைக் கொண்டிருக்கும். சந்திரனைப்போன்று தண்ணொளியையும், சூரியனைப் போன்ற வெப்பத்தினையும், நட்சத்திரத் தினைப் போன்று இலங்கும் தன்மை யினையும் உடையவளே பெண் என்ற கருத்துப்பட இவ்வணிகலன் அணி யப்படுகின்றது என்று கூறப்படு கின்றது.

மூக்குத்தி பல்லாக்குடன் அணியப் படுவதையே மரபு கற்பிக்கின்றது. தமிழ்ப் பெண்கள் விசேடமான தினங் களிலேயே அல்லது வைபவங்களி லேயே பல்லாக்குடனான மூக்குத்தியை அணிவர். பல்லாக்கு அநேகமாக வெள்ளியினாலேயே செய்யப்படுவது மரபு. பல்லாக்கு என்ற அணிகலன் இருபக்க நாசித்துவாரங்களையும் ஒன் றிணைக்கும் நடுநாசியின் உட்பக் கத்தில் துவாரமிட்டு அணிந்து கொள் வதற்குரியதாகும். கண்ணுக்குரிய கூரிய பார்வையை கொடுப்பதற்காகவே இந்த அணிகலன் அணியப்படுகின்றது. கண் விழி மடலில் உள்ள நரம்புகளுக்கும் நடு நாசியின் மெல்லிய சுவர் நரம்பு களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருப்பதனை மையப்படுத்தி அங்கு துவாரமிடப்பட்டு வெள்ளி உலோகத் தாலான பல்லாக்கு அணிவிக்கப்



படிப்பகம்

www.padippakam.com

படுகின்றது. இயல்பாக உள்ள பெண்களின் கூரியபார்வை பல்லாக்கு அணிதலினூடாக நிவர்த்தி பெறுமெனவும் நம்பப்பட்டது. (ராஜஸ்தானிய பெண்கள் நித்திய வாழ்வில் பல்லாக்கில் இருந்து ஒரு மெல்லிய சங்கிலியை தமது வலது/ இடது புறத்திலுள்ள கன்னக் குச்சியுடன் இணைத்து அணிந்து கொள்வதனை மரபாகக் கொண்டுள்ளனர். முட்டாக்கு இடும் அம்மரபின் பின்னணியில் கன்னக்குச்சியுடன் இணைந்த சங்கிலி அவர்களது முகத்திரை விலகாமல் இருப்பதற்கு இடமளிக்கிறது. அவ்வகையில் முஸ்லீம்களது பண்பாடும் இங்கு செல்வாக்கு செலுத்தியிருக்கும் பண்பினை இங்கு உணர்ந்துகொள்ள முடிகிறது)

பூப்புநிலை அடைந்த கன்னியர்கள் ஏதாவது ஒரு அணிகலனை- பொதுவாக கழுத்துச் சங்கிலியை அணிய வேண்டும் என்ற மரபு காணப்படுகின்றது. பூப்புனித நீராட்டு வைபவத்தின் போது தாய்மாமன் அவ் அணிகலனை அக் கன்னிகைக்கு அணிந்துவிடுவதும் மரபாகவே இருந்துவருகின்றது. பூப்பெய்தி முதல் எட்டு நாட்களும் அக்கன்னி படுத்துறங்கும் தலையணையின் அடியில் இரும்பு, செம்பு, வெள்ளி போன்ற உலோகத்தாலான பொருட்களை வைத்து விடுவதும் ஒரு வழக்கமாக உள்ளது. கரிக்கோடு ஒன்று அக் கன்னிகையின் உறங்கு மையத்தை அலங்கரிக்கும். துர்வாயுக் களோ அல்லது துர்தேவதைகளோ அக் கன்னியை பீடித்திருக்காமலே அவ்வாறு கரிக்கோடு இடும்முறை பின்பற்றப்பட்டது. பாக்குவெட்டியும் சத்தகமும் வேப்பிலையும் அக்கன்னிகையின் கரங்களில் தவழும். இக்கட்டத்திலேயே நரிக் கொம்பு தாயத்து அணியும்முறையும் பின்பற்றப்படுகிறது.

திருமணச் சடங்கின்போது பலவகையான அணிகலன்கள் அணிவிக்கப்படுகின்றன. தாலிமட்டும் தனித்துவமான வகையில் சடங்காசார நிகழ்வுகளுடன் அணிவிக்கப்படுகின்றது. ஒற்றைக் கொம் புத்தாலி, இரட்டைக் கொம்புத் தாலி, அம்மன்தாலி, புறாத்தாலி போன்றன சமூக ரீதியானதும், பிராந்திய ரீதியானதும், சமய ரீதியானதுமான தனித்துவமான நிலைகளைச் சுட்டி நிற்கின்றன. கிறிஸ்தவ மக்கள் புறாத் தாலியை அணிகின்றனர். தாலிப் பொருத்தமற்ற தம்பதியினர் அம்மன் தாலியை அணிகின்றனர். ஒற்றைக் கொம்புத்தாலி பிராமண வர்க்கத்தினராலும் இரட்டைக்கொம்புத்தாலி ஏனையோராலும் அணியப்படுகின்றன.

தாலி ஆரம்பத்தில் மஞ்சள்கட்டியாகவே இருந்தது. ஒரு நூலில் மூன்று முடிச்சுடன் இம்மஞ்சள்க் கட்டியைத் தாலியாகக் கட்டிவிடும் மரபு குடும்ப வாழ்வின் தொடக்க நிலையைக் குறித்தது. பின்னர் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளூடாகவே மஞ்சள்க் கட்டி தங்கக்கட்டியாகவும் அதனைத்தாங்கிய நூல் தங்கக் கொடியாகவும் மாற்றம் பெற்றது. ஆனால் தாலி என்ற அணிகலனுக்கு கொடுக்கப்பட்ட அத்தனித்துவமான வடிவம் எப்பொழுதிலிருந்து



படிப்பகம்

www.padippakam.com

எங்கு உருவாக்கப்பட்டது என்பது பற்றி இன்னும் தெளிவான கருத்தமைவு முன்வைக்கப்படவில்லை. விஜய நகர நாயக்கர் கலைப் பாணியில் இடம்பெற்ற அம்மனின் தாலியமைப்பில் இன்றைய யாழ்ப்பாணத்து நங்கையர் தாலியை அணிகின்ற போதும் அதனுள் உள்ளடக்கப்பட்ட தனித்துவமான குறியீடுகள் பற்றிய விளக்கம் இன்னும் முன்வைக்கப்படவில்லை.

**Fertility** என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் செழிப்பு–விருத்தி என்ற பொருளை வடிவமைக்கும் விதத்திலேயே தாலி அமைகின்றது. இங்கு கருவளம் வெளிப்பட்டு நிற்கின்றது. பழங்கற்கால மனிதனால் உருவாக்கப்பட்ட வீனஸ் தெய்வத்தின் தோற்றத்தினை இன்றைய தாலி அமைப்பில் காணமுடியும். தலையற்ற ஒரு பெண்ணின் மார்பகங்களும் நிறைமாதக்கருவளத்தின் தோற்றத்தினையும் வெளிப்படுத்துவதாகவே தாலி அமைகின்றது. ஆனால் அதன் கொம்புவேறுபாட்டால் அக் கருத்தமைவிற்குரிய வெளிப்பாட்டில் வேறு அர்த்தங்கள் கற்பிக்கப்படுகின்றன.

புறா வாழ்வில் ஒரு வழிகாட்டிப் பறவை எனக் கொள்ளப்படுகின்றது. குறுகிய காலத்திற்குள் பல்கிப்பெருகும் ஆற்றல் அதற்கு உண்டு. கருவளத்தில் சிறந்து விளங்கும் பறவைகளில் புறா இனம் தனித்துவமானது. சமுத்திரவியற் பண்பாட்டு வாழ்வில் புறா திசைகாட்டும் பறவையாக மதிக்கப்பட்டது. வாழ்வின் திசைகாட்டி என்ற வகையில் கிறீஸ்தவ மக்களால் புறாத் தாலி அணியப்படுகிறது.

தாலியை வைத்து பூசை வழிபாட்டில் ஈடுபடும் வழக்கம் எமது பிராந்தியத்துப் பெண்கள் மத்தியில் இன்றுவரை காணப்படுகிறது. திருவிளக் குப்பூசை இவ்வாறான நிகழ்வுகளில் ஒன்று. கணவனின் ஆயுளுக்கு விருத்தியும் பலமும் வேண்டி பெண்கள் திருவிளக்குப் பூசையில் ஈடுபடுவர். மணமான பெண்கள் திருமண நாளன்றும், சமுத்திரத் தீர்த்தோற்சவம் நடைபெறும் தினங்களிலும் தாலியை நோக்கி–கையில் தாங்கி ஆராதனை செய்வர். தீர்த்தோற்சவம் நிகழும் தருணங்களில் தாலியை கற்பூர தீபத்திற்கெதிரே காட்டி கண்களில் ஒற்றிக் கொள்கின்ற முறையை இன்றும் காணலாம்.

மனைவி தன் கணவன் இறப்பின் அந்நாளில் மேற்கொள்ளப்படும் அபரக் கிரியைகளின் இறுதியில் தாலியைக் கழற்றி கணவனது கழுத்திலோ அல்லது நெஞ்சகத்திலோ வைத்து விடுவதும் மரபாக இருந்து வருகிறது. இதனை தாலி கழற்றும் வைபவம் என்று குறிப்பிடுவர். திருமணமான எந்தவொரு பெண்ணினாலுமே பொறுத்துக்கொள்ள முடியாத நிகழ்வாக இது அமைகின்றது. தாலி கழற்றும் வைபவமானது நிறை நாழிகை வைத்த தாம்பாளத்தில் தேங்காய் உடைக்கும் நிகழ்வுடன் பிராமணியமல்லாத குருக்கள் முன்னிலை



படிப்பகம்

www.padippakam.com

யிலேயே நடைபெறும். கணவனது இறுதி ஊர்வலம் இடுகாடு வரைக்கும் அத்தாலி சென்று திரும்பும். அதன் பிற்பாடு அப்பெண் கைம்பெண் என்று அழைக்கப்படுகிறாள். கைம் பெண்ணை மங்களகரமான நிகழ் வுகளில் இணைத்துக் கொள்வதில் எமது சமூகம் முன்நிற்பதில்லை. அவ்வகையில் தாலியின் மகிமை யையும் சமூக அந்தஸ்தினையும் எம் மால் உணர முடிகின்றது.

மெட்டி அணியும் மரபும் யாழ்ப் பாணத்து தமிழ் மங்கையரிடம் இற் றைவரைக்கும் காணப்படுகிறது. பிரா மணீய சடங்குகளினூடாக தாலிகட்டுத் திருமண நாளில் இருந்தே, மங்கள நாண் அணியப்பட்ட பின்னர் மெட்டி அணிவிக்கும் சடங்கு நடைமுறைப் படுத்தப்படுகிறது. மணமகன் மணமக ளின் பாதங்களை அம்மியிலிட்டு அவ ளது கால் விரல்களில் மெட்டியை அணிவிப்பான். பொதுவாக மெட்டி என்ற அணிகலன் திருமணமான பெண்களை தனித்துவமாக இனம் காட்டுவதற்காகவே கூறிக்கொள்வர். பெண்கள் தலை குனிந்தவண்ணமே நடந்து செல்வதால் ஆண்களால் அப் பெண் திருமணமானவளா? இல்லையா? என்பதனை உறுதிப்படுத்துவதற்கு இம்மெட்டி என்ற அணிகலன் உதவு வதாக கருதப்பட்டே அவ்வழக்கம் பின்பற்றப்படுகிறது. மெட்டி கணவ னால் மனைவிக்கு அணிவிக்கப் படுகின்ற உள் நோக்கம் இன்பத்திலும் துன்பத்திலும் தாலிகட்டிய கணவ னையே பின்தொடர வேண்டும் என்ற தத்துவமே ஆகும். *மெட்டி* என்ற சொல் *மிஞ்சி* என்றும் வழக்கத்தி லிருந்து வருவதனைக் காணமுடி கிறது. கணவனுக்கு மிஞ்சி நடந் துகொள்ளக்கூடாது என்பதனையே அது அர்த்தமாகக் கொண்டுள்ளது என்பர்.

கணையாழி (மோதிரம்) தமிழ் மங்கை யரது வாழ்வில் இன்றியமையாத ஓர் அணிகலனாக விளங்கி வருகின்றது. ஒரு குழந்தை பிறந்து 31ம் நாளிலி ருந்து கணையாழியை அணிவிக்கும் மரபு யாழ்ப்பாணத்தில் இருந்து வரு கின்றது. சுபயோகங்களிலும் சுபகாரி யங்களிலும் கணையாழியை அணி விக்கும் மரபு இங்கு காணப்படுகின் றது. அன்புக்கணையை தாங்கிய முத்திரை என்ற வகையில் *கணை யாழி* அன்புச் சின்னமாக அணிவிக் கப்படுவதனைக் காணலாம். இம்மரபு தென்னாசியாவில் பொது இயல்பாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஆகமவிதி முறையிலான சடங்குகளில் *தற்பைப்புல்* கணையாழி போன்று முதலில் மோதிரவிரலில் அணிவிக்கப் பட்ட பின்னரே கருமங்கள் தொடர்ந்து ஆற்றப்படுகின்றன. அங்கு சமய ரீதிமி லான முக்கியத்துவத்தின் குறியீடாக கணையாழிக்குப் பதிலாக *தற்பைப்புல்* அமைந்திருப்பதனைக் காணலாம். ஆனால் திருமணச்சடங்கு–சம்பிரதா யத்தின்போது கணையாழி அணிவது ஆகம விதிமுறைக்குட்படுத்தப்படாது இருப்பதின் அர்த்தம் தெளிவாக இல்லை. ஆனால் கணையாழி வட



படிப்பகம்

www.padippakam.com

மொழி இலக்கிய பாரம்பரியத்தில் பெரிதும் உகந்த ஓர் அணிகலனாக விளங்கியிருந்தது என்பதும் *சாகுந்தலம்* என்ற காவியத்தின் சிறப்பிற்கும் அதுவே அடிப்படையாக இருந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கணையாழி தொடர்பான முரண்பாடான ஒரு பிரதான நடைமுறை திருமணமாகாத–திருமணமான ஆண்–பெண் இருபாலாரிடமும் காணப்படுவதனை இங்கு சுட்டிக்காட்டுவதும் பொருத்தமானது ஆகும். அதாவது ஆகம விதிமுறைக்குட்படாத வகையில் கணையாழி அணிதலில் திருமணமாகாத ஆண்–பெண் இருபாலாரும் இடது கரத்திலும் ஏனையோர் வலது கரத்திலும் அணிந்துவரும் மரபினை கைக்கொள்ளவதனைச் சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும். இம்முறை எங்கிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது? கிறீஸ்த்தவ மதத்தின் செல்வாக்கின் பின்னணியில் இம்மரபு இங்கு தோற்றம்பெற்றதா? இல்லையா? என்பது ஆராயப்பட வேண்டிய ஓர் அம்சமாகும்.

அணிகலன்களும் நம்பிக்கை–மரபுகளுமென்ற இவ் அத்தியாயத்தில் அணிகலன்களோடு அடையாளம் காணப்படத்தக்க எமது கலாச்சார பெறுபேறு பற்றியும் இவ்வத்தியாயத்தில் குறிப்பிட வேண்டிய அவசியம் உண்டு. தென்னாசியப் பண்பாட்டுப் பெறுபேறு சுட்டுவதன் அடிப்படையில் சமயப்பிரிவு, வழிபாட்டுக் கருப்பொருள், சமூகக் கட்டு, பிராந்தியத் தனித்துவம் போன்ற அம்சங்களை எமது பண்பாட்டு வெளிப்பாட்டினூடே தனித்துவப்படுத்தி அடையாளம் கண்டு கொண்டமையில் அணிகலன்கள் பெரும்பங்கு வகித்திருக்கின்றன என்பதனை உணர முடிகிறது. விஜயநகர நாயக்கர்கள் அணிகலன்கள் மேல் கொண்டுள்ள மோகத்தினை அவர்களது சிற்பலஷணங்களூடாகக் கண்டு கொள்ளமுடிந்தது. இதே போன்று துவார சமுத்திர ஹொய்சாளர்களது கலை வெளிப்பாடுகளினூடே தக்கணத்து மத்தியகால நடனமாதரின் அணிகலன்களின் தனிச் சிறப்பியல்பினை கண்டுகொள்ள முடிகிறது. யாழ்ப்பாணத்திலும் கமால் வீதியிலுமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சோழர்கால ஐயனார்சிலை மத்தியகால அணிகலன்களைப் பற்றிய தகவல்களைத் தரும் சான்றாக உள்ளது. சீகிரிய ஓவிய மாதரின் அணிகலன்களின் தன்மையில் இருந்து அவர்களை கடவுளர் அல்லர் என உறுதிப்படுத்த முடிந்தது.

இப்பின்னணியில் அணிகலன்களே தெய்வீக உலகிலுள்ள கடவுளர்களை அடையாளம் காண்பதற்கு உதவி நிற்பது போன்று, பல்வேறு சமூகத் தட்டினரையும், பிராந்தியத் தனித்துவத்தையும் அடையாளம் காண்பதற்கு அவையே அடிப்படை ஆதாரமாக உள்ளன. கபாலமாலை அணிபவர்கள் காபாலிகர் அல்லது காளகஸ்தர் என்பதுபோல் கூந்தலில் கூந்தல் வாரியை (சீப்பு) அணிந்து செல்பவர்கள் சிங்களப்பெண்கள் என அடையாளம் காண முடியும். இவ்வாறு தமிழ்



படிப்பகம்

www.padippakam.com

மக்கள் என அடையாளம் காணக் கூடிய வகையில் தனித்துவமாக அமைந்த அணிகலன் மூக்குத்தி என் றால் மிகை இல்லை. சிவனது பார் வதியையும் விஷ்ணுவினது லக்ஷ்மி யையும் அணிகலன்களின் வேறுபாட் டின் அடிப்படையிலும் தனித்துவத்தின் அடிப்படையிலுமே கண்டுகொள்ளவது போல், இனக்குழும மக்களையும் இப் பிராந்தியத்தில் அணிகலன்களினூடாக வும் கண்டுகொள்ள முடிகிறது.

*காகம் தின்னிகள்* என்ற ஒரு தனித்துவமான குழுமத்தினர் இற்றை வரைக்கும் குடாநாட்டின் வடமராட்சி பரப்பில் வாழ்ந்துவரும் தனித்துவம் அவர்கள் அணிந்துவரும் அணிகலன் களூடாகவும் கண்டுகொள்ளமுடிகிறது. எனவே அணிகலன்கள் மரபினையும் நவீனத்துவத்தினையும் இணைக்கின்ற கைவினைக் கலை மரபின் வெளிப் பாடுகளாக உள்ளன எனலாம்.



படிப்பகம்

www.padippakam.com

# முடிவுரை

யாழ்ப்பாணத்தில் பெண்கள் அணியும் அணிகலன்கள் பற்றிய இச்சிறு ஆய்வுக் கட்டுரையானது பெருமளவிற்கு நுண்கலை நின்றநோக்கில் அடிப்படைப்பட்டதாயினும், அந் நோக்கினை அது ஆரம்ப நிலையிலேயே கொண்டிருப்பதனை இங்கு குறிப்பிடுதல் அவசியமானதாகும். ஏனெனில் தமிழ்ப் பெண்கள் அணிந்த, அணிந்து வருகின்ற அணிகலன்கள் பற்றிய விபரண ரீதியான சில அம்சங்களை மேலெழுந்தவாரியாக ஆய்வுக்கெடுத்துக் கொண்டதன் அடிப்படையிலேயே இங்கு பூரணத்துவமான நுண்கலை நின்ற நோக்கில் இவ்வாய்வு அமையத்தடையாக விளங்கியது. சுமார் 2500 ஆண்டுகள் பழமையான வரலாற்றினைக் கொண்ட பரந்த யாழ்ப்பாணத்தின் பண்பாட்டுப் பரப்பில் எவ்வகையிலும் இத்தகைய ஆய்வுகளை எடுத்துக் கொண்ட அடிப்படையில் மட்டும் வைத்துக் கொண்டு ஆய்வுசெய்து விடமுடியாது. இருந்தும் ஓர் ஆரம்பம் என்ற வகையில் யாழ்ப்பாணத்தில் பெண்கள் அணியும் அணிகலன்கள் தொடர்பான இச்சிறு ஆய்வானது எடுத்துக் கொண்ட விடயத்தின் பிரதான இயல்புகளை, தொடக்கநிலையில், ஒரு சட்டத்தினுள் அமைத்துக் கொள்கின்ற கன்னி முயற்சியாக அமைகின்றது. ஆகவே இத் துறையில் ஈடுபாடு கொண்டு அக்கறை செலுத்தும் எதிர்கால ஆய்வாளர்களுக்கு தகவல்களை வழங்கும் ஒரு தொகுப்பாக இவ் ஆய்வு அமையுமாயின் அதுவே இவ் ஆய்வு தொடர்பாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கமாகவும் அமையும்.

இவ்வாய்வுக்கட்டுரையின் தொடக்கத்தில், ஆபரணம் தொடர்பாக கொடுக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட விளக்கங்களைத் தொடர்ந்து இவ்வாய்வின் பிரதான நோக்கங்களாக இரண்டு அம்சங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அவையாவன:–

அ) யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் பாரம்பரியக்கலைமரபுகள் கால ஓட்டத்தினால் அள்ளுண்டு, மறைந்து போகக் கூடிய ஓர் அபாய நிலை தோன்றியுள்ளமை.

ஆ) இப்பிரதேசத்தில் காலாதிகாலமாக பின்பற்றி வரப்பட்டிருக்கக்கூடிய ஆபரணக்கலை தொடர்பாக தொழில்நுட்பமுறையின் தன்மைகளையும் சிறப்பியல்புகளையும் வெளிப்படுத்தல்.

இவ்விரு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இச்சிறு ஆய்வின்கண் இதுவரையில் இவ்வாய்வு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைக் குறிப்பிட முயற்சித்தபொழுது பெருமளவுக்கு எமக்கு ஏமாற்றமே கிடைத்தது என்பதனை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. ஈழத்தமிழர் பண்பாட்டு மரபில் அக்கறையுடைய ஒவ்வொருவரையுமே விசனிக்க வைக்கும் அம்ச



படிப்பகம்

www.padippakam.com

மாகவும் இது அமைகிறது. இவ் ஆய்வின் தொடக்கத்தில் குறிப்பிட்ட வாறு, யாழ்ப்பாணத் தமிழர்களுக்கென தனித்துவமான கலைமரபுகள் எவையும் இருந்தனவா என்பதனையிட்டு இன்னும் ஆய்வாளர் மத்தியில் ஒரு தெளிவற்ற நிலை காணப்படுவது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. பெரும்பாலான அம்சங்களில் யாழ்ப்பாணச் சமூகத்தவரிற்கும் கேரள மானிலத்தில் உள்ள மலபார் சமூகத்தவர்களுக்கும் இடையிலான மிக நெருங்கிய பண்பாட்டு உறவின் அடிப்படைகளை M.D இராகவன் தொடக்கம் கா. சிவத்தம்பி வரையிலான சமூகவியல் ஆய்வாளர் எடுத்துக்காட்டுவர். இந்நிலையில் யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண்கள் அணியும் ஆபரணக்கலையில் ஏதாவது தனித்துவமான அம்சங்கள் காணப்படுகின்றனவா என்ற வினாவிற்கு விடைகாண வேண்டிய அவசியம் தொடர்பாக இங்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். தொடர்ந்து அதேநிலையில் மதவடிப்படையில் தமிழ்ப் பெண்கள் மத்தியில் முக்கியத்துவம் பெற்றுள்ள ஆபரணக்கலைக்கும் தெய்வீகவியலுக்கும் இடையிலான தொடர்புபற்றி ஆராய வேண்டிய அவசியமும் வற்புறுத்தப்பட்டமையைக் காணலாம். இது தென்னாசியக் கலைமரபுகள் யாவும் சமயத்தைத் தழுவியெழுந்தவை என்பதனை வற்புறுத்தி நிற்கின்ற தன்மையை வெளிப்படுத்தி நிற்கின்ற அதே நேரத்தில் சமூக அடிப்படையில் அணிகலன்களும் வேறுபடுகின்ற தன்மையைக்காணலாம்.

யாழ்ப்பாணத்துப் பெண்கள் அணியும் ஆபரணங்கள் பற்றிய ஆய்விற்கு முன்னுரையாக அமையும் என்ற காரணத்தினால் ஆய்வின் மூன்றாவது நிலையில் இலங்கைப் பெண்கள் பொதுவாக அணிந்துவரும் ஆபரணங்கள் பற்றிய விளக்கம் இடம்பெறுவதனை இங்கு காணலாம். இக் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக கலாயோகி ஆனந்தக்குமாரசாமி அவர்களும் பின்னர் கலாநிதி நந்தவிஜயசேகர என்பவரும் ஓரளவிற்கு அடிப்படைத் தகவல்களைக் கொடுத்துள்ளனர். ஆனால் விரிவான ஆய்வுகள் மேலும் மேற்கொள்ளவேண்டிய ஒரு தேவை காணப்படுகின்ற பொழுதிலும் இங்கு மாட்டின் விக்கிரமசிங்கவின் பணிகள் அத்தேவையின் ஒரு பகுதியினை ஈடுசெய்துள்ளது எனக் குறிப்பிடலாம். ஆனால் தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தமட்டில் இன்னும் இத்துறை ஆய்வானது விருத்தி செய்யப்படாமலேயே இருப்பது மிகவும் கவலை அளிப்பதாகவே உள்ளது. சிகிரிய ஓவியங்களில் காணப்படும் அம்சங்கள் பல இலங்கைப் பெண்களின் ஆபரணக் கலைக்கு முன்னோடியானவை என்ற கருத்து பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள போதிலும் அவை எந்தளவிற்கு தமிழ்ச் சமூகத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் என்ற கேள்வியும் எழுந்துள்ளமையைக் காணலாம். பொதுவாக தென்னிந்திய மக்களின் அணிகலன்களில் இருந்து இலங்கை மக்களின் அணிகலன்கள் அதிகம் வேறுபடாத நிலையில் இலங்கைப் பெண்கள் அணிந்து வந்த பொதுமையான ஆபரணங்கள்



படிப்பகம்

www.padippakam.com

பற்றிய விளக்கம் இங்கு அவசிய மானது என உணரப்பட்டது.

இவ்வாய்வின் நான்காவது நிலையில் யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பெண்களின் சமூகவமைப்பிற்கும் ஆபரணக்கலைக் குமிடையிலான தொடர்பினை எடுத் துக் காட்டவேண்டிய ஒரு தேவை ஏற்பட்டுள்ளது. ஏனெனில் ஆபரணக் கலை பற்றிய வரலாறானது தனியே நுண்கலைநின்ற வரலாறாகவோயன்றி சமய வரலாறாகவோ அமையாமல் சமூக வரலாறாகவும் அமையும் என்ற காரணத்தினால் இவ்வாய்வின் இரண் டாவது நிலையில் யாழ்ப்பாண சமூக வியலுக்கும் ஆபரணக் கலைக்கு மிடையிலான தொடர்புகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. தமிழ்ப்பெண்களின் சமூக அந்தஸ்தினை அளவீடு செய் கின்ற ஓர் அம்சமாக அவர்கள் அணிந்துவந்த ஆபரணங்கள் விளங் கிவந்தன என்ற காரணத்தினால் ஆபர ணங்கள் பற்றிய வரலாறானது யாழ்ப் பாணத்தில் சமூகப் பரிமாணமாகவும் அமைகின்ற தன்மையை மனங் கொண்டு இவ் அத்தியாயத்தில் சில முக்கியமான கருத்துக்கள் முன்வைக் கப்பட்டுள்ளன. அவற்றுள் தாலி, தாலிக்கொடிகள் என்பன யாழ்ப்பாணத் தில் இறுக்கமாயமைந்துள்ள சாதிப் பாகுபாட்டினதும், மக்களது சமூக அந்தஸ்தினதும் குறியீடுகளாகவிளங்கி வந்த தன்மை எடுத்து விளக்கப் பட்டுள்ளது. ஒற்றைக் கொம்புத்தாலி, இரட்டைக் கொம்புத்தாலி, மூன்று கொம்புத்தாலி என்பன இன்றுவரை வர்ணப்பாகுபாட்டின் அடிப்படையை நிலை நிறுத்திவருகின்ற தன்மையை யாழ்ப்பாணத்தில் இன்றுவரை காண முடிகிறது.

இவ்விடத்தில் இச் சிறு ஆய்வுநூலை எழுதுவதற்குப் பேருதவியாக இருந் தது தமிழ்நாட்டு அணிகலன்கள் என்ற நூலாகும் இந்நூலை எழுதிய தமிழ் நாட்டு அறிஞரான M.D. இரா கவன் என்பவருடைய ஆர் வத்தை யாழ்ப்பாணச் சமூகவத்தரது பாரம்பரிய உணர்வோடு ஒப்பிட்டு நோக்கும்போது சற்று பின்னடைவையே உற்றுநோக்க முடிகின்றது எனலாம். ஏனவே யாழ்ப் பாணத்தமிழர் ஒரு நீண்ட பிரத்தியே கமான பாரம்பரியத்தைக் கொண்டவர் கள் என்றும், அவர்கள் ஒரு தனித் தேசிய இனம் என்பதை வெள்ளிடை மலையாகச் சுட்டிக்காட்டுவதற்கு, இப் போராட்டகாலத்திலும், வருங்காலத்தி லும் இவ்வாறான பாரம்பரிய உணர்வு கள் வளர்த்தெடுக்கப்படவேண்டியது வருங்காலச் சமூகத்தவரது கடமை எனக்கூறின் அது மிகையாகாது.



படிப்பகம்

www.padippakam.com

# பின்னிணைப்பு: 1

## அகரவரிசையில் அணிகலன்கள்

அங்கதம் (வாகுவலயம்)
அங்கிலியகம்
அட்டிகை
அத்தவலயம்
அத்திக்காய்க்கொலுசு
அரசிலை
அரவம்
அரியகம்
அரும்புச்சரம்
அரைச்சதங்கை
அரைச்சிலைப்பொன் அடர்
அரைஞாண்
அரைமூடி
அரையணி
ஆடகம்
ஆமைத்தாலி
ஆலங்காய்க்கொலுசு
ஆழி
ஆளிக்காப்பு
இட்டடிக்கை
இடைச்சரி
இயதவாசனை
இரத்தின கடகம்
இரத்தினகல்பம்
இரத்தின குண்டலம்
இரத்தினமகுடம்
இரத்தினபந்த உபக்கீரவம்
இரத்தின மோதிரம்
இரத்தினவங்கி
இரத்தினவளையம்
இரதப்பல் காழ்
இராக்குடி
இராசவர்த்தம்
இலம்பகம்
இலை
உட்கட்டு
உத்தி
உதரபந்தனம்
உபக்கீரவம்
ஊருதாமம்
ஏகவடம்
ஏகவல்லி
ஏணிப்படுகால்
ஏனாதிமோதிரம்
ஐம்படைத்தாலி
ஓடை
ஓரணை
ஓலை
கங்கணம்
கச்சி
கடகத்திரயம்
கடகம்
கடிகை
கடிகையாரம்
கடிசூத்திரம்
கடிப்பிணை
கடுக்கண்
கடுகுமணிமாலை
கண்டசரம்
கண்டநாண்
கண்டமாலை
கண்டிகை



படிப்பகம்

www.padippakam.com

கண்டை
கந்தமாலை
கம்பி
களிகை
கரண்டமகுடம்
கலாபம்
கவான்செறி
கழல்
கழல்தொடி
கழற்சிக்காய் மாலை
களாபம்
கன்னசரம்
கன்னதாம்வலம்பனம்
கன்னப்பூ
கன்னபூரம்
காசுமாலை
காஞ்சி
காப்பு
கால்சரிகை
கால்கொலுசு
கால்வளை
காலாழி
காற்சரி
காற்சவடி
காறை
காறைப்பூ
கான் மோதிரம்
கிண்கிணி
கித்துருமாரியம்
கிரீடமகுடம்
கிரீவம்
கிரைவேயாம்
கிறி
குச்சம்
குஞ்சம்
குடைச்சூழ்
குண்டலம்

குணுக்கு
குதம்பை
குரடு
குருடுசரி
குவளைக் கடுக்கன்
குழை
குறங்குசெறி
கூட்டுக்கம்பி
கேயூரம்
கைக்கட்டு
கைச்சரிகை
கைவளை
கொக்குவாய்
கொடி
கொடைக்கழல்
கொண்டைத்திருகு
கொத்தமல்லிமாலை
கொத்து
கொத்திக்காய்கொலுசு
கொப்பு
கொலுசு
கோதை
கோல்தொடி
கோல்வளை
கோவை
கோளகை
சங்கபத்திரம்
சங்கிலி
சடகு மோதிரம்
சங்குவளை
சடாங்கம்
சடாமகுடம்
சடைத்திருகு
சடைநாகர்
சதங்கை (அரை)
சதங்கை (கால்)
சந்திரகாரம்



படிப்பகம்

www.padippakam.com

சந்திரப்பிறை
சந்திரப்பிரபை
சந்திரபாணி (கடிப்பிணை)
சப்தசரி
சர்ப்பகுண்டலம்
சரப்பனி
சல்லரி
சவடி
சன்னவீரம்
சன்னாவதஞ்சம்
சாவகம்
சிடுக்கு
சித்திக்கல்பம்
சிந்தாமணி
சிம்மக்குண்டலம்
சிரச்சூளம்
சிரத்தாரமகுடம்
சிரிமுடி
சிரிசந்தம்
சிரிவாகுவாலயம்
சிலம்பு
சிவந்திப்பூக்கடுக்கண்
சிவந்திப்பூ மோதிரம்
சிறுதாள்
சிறுநெற்றாலி
சிறுமணி
சின்னப்பூ
சீதேவி
சுடிகை
சுண்டக்காய்மாலை
சுத்து
சுத்துமணி
சுபூரிமம்
சுரிதம்
சுவரணதாடகம்
சுழங்கொடி
சூட்டு
சூடகம்
சூடாமணி
சூடிகை
சூடை
சூரியப்பிறை
சூலம்
சூழி
சூளாமணி
செங்கேழ்கிளர்மணி
செஞ்சூட்டுக்குழை
செவ்வலிடல்கன்
செவிப்பூ
சேகரம்
சொடுகுப்பூ
சோன்கச்சிடுக்கின்கூடு
ஞெகிழம்
தடுப்பு
தண்டட்டி
தண்டை
தத்தவளை
தலைச்சுட்டி
தலைப்பாளை
தாமம்
தாமரை மணிமாலை
தாலி
தாலிக்கொழுந்து
தாலிமணிவடம்
தாழ்வடம்
தாள்
தாள்செறி
தாளம்பூ
தாளிம்பம்
தாளின்பம்
தாளுருவி
திரள்மணிவடம்
திரிசரம்



படிப்பகம்

www.padippakam.com

திரிசரி
திரு
திருஉதரபந்தனம்
திருஉறுப்பு
திருவடிக்காரை
திருப்பட்டிகை
திருக்குதம்பை
திருக்கால்வடம்
திருச்சன்னிவடம்
திருமாலை
திருமுடி
திலகம்
தும்பு
துளசிமணிமாலை
தெய்வஉத்தி
தென்பல்லி
தொடர்
தொடி
தொடையல்
தொய்யகம்
தோடா
தோடு
தோரை
தோள்பதக்கம்
தோள்வலையம்
தோள்வளை
நத்து
நல்லணி
நவகண்டி
நவசரி
நவரத்தினமோதிரம்
நவரத்தினவளை
நாகபடம்
நாண்
நாமரவளி
நித்திலக்கோவை
நித்திலமதாணி
நித்திலாஞ்சலம்
நீலக்கடைச்செறி
நீலக்குதம்பை
நீலத்தின்முத்தோறணை
நீவி (சவனம்)
நுண்தொடர்
நூபுரம்
நெல்லிக்காய்மாலை
நெளிமுடக்கு
நெற்றிச்சுட்டி
நெற்றிப்பட்டம்
நேர்ஞ்சங்கிலி
பகுவாய்மோதிரம்
பஞ்சரி
பட்டம்
பட்டைக்கொலுசு
படுகண்
பத்திக்கச்சு
பத்திரக்குண்டலம்
பத்திரக்கல்பம்
பத்திரச்சரிகை
பத்திரம்
பதக்கம்
பரியகம்
பரிவடிவம்பு
பருமம்
பவளமேகலை
பவளவடம்
பவளவளை
பன்மணித்தாலி
பாகுமாலவலம்பம்
பன்மணிமாலை
பன்னிரைத்தாலி
பாட்லா
பாடகம்
பாண்டில்
பாசமாலை



படிப்பகம்

www.padippakam.com

பாசித்தாமம்
பாதச்சிலம்பு
பாதசரம்
பாதசாலம்
பாம்படம்
பாம்பணி
பாம்பாழி
பாலபட்டம்
பிச்சியரும்புமாலை
பிரகோட்டவளையம்
பிருட்டகண்டிகை
பில்வணை
பிறை
பின்றாலி
பீலி
புகிடி (பூடி)
புசங்கக்கடகம்
புரியகம்
புரிவளை
புல்லகம்
புல்லாக்கு
புல்லிகை
புலிநகத்தாலி
புலிப்பல்தாலி
புளையாரம்
பூங்கொடிப்பொற்கலம்
பூண்
பூரப்பாளை(தொய்யகம்)
பூரியம்
பேசரி
பைந்தொடி
பொட்டு
பொலந்தார்
பொங்கலம்
பொலம்பூந்தும்பை
பொலன்கலல்
பொலன்கழல்

பொற்கச்சு
பொற்பூ
பொற்குவளை
பொற்சரடி
பொற்பட்டி
பொற்றோரை
பொற்றாமரைப்பூ
பொன்கழங்கு
பொன்ஞான்
பொன்தாலி
பொன்மணிமாலை
பொன்மாலை
பொன்மோதிரம்
பொன்வளை
பொன்வாகை
பொன்ணிமாலை
பொன்னோலை
மகரகுண்டலம்
மரப்பகுவாய்
மகரப்பகுவாய்மோதிரம்
மகரவலயம்
மகரவாய்ப்புரிவளை
மகரி
மகுடம்
மங்கல அணி
மஞ்சிரிகை
மடல்
மணிக்குவளை
மணிசெய்மண்டை
மணித்தாலி
மணிபந்தனம்
மணிமாலை
மணிமிடைப்பவனம்
மணிமோதிரம்
மணியாரம்
மணியாழி
மணிவடம்



படிப்பகம்

www.padippakam.com

மதாணி
மரகதக்கடைசெறி
மரகதத்தாள்செறி
மரகதநாயகம்
மருதங்காய்மாலை
மலர்ச்சரம்
மாங்காய்மாலை
மாணிக்கஓலை
மாணிக்கத்தாலி
மாணிக்கத்தாள்
மாணிக்கமேகலை
மாத்திரை
மாதுளங்காய்மாலை
மாம்பிஞ்சுக்கொலுசு
மாராட்டம்
மாலை
மித்திரகல்பம்
மிளகுமாலை
முக்கட்டு
முகச்சரம்
முஞ்சகம்
முஞ்சம்
முஞ்சி
முடக்கு மோதிரம்
முடிச்சு
முத்திரைமோதிரம்
முத்தின் சூடகம்
முத்தின் வளையல்
முத்தின் கால் காரை
முத்தின் பட்டிகை
முத்துக்கொலுசு
முத்துமாலை
முத்துவடம்
முத்துவள்ளி
முந்திரிகை
மும்மணிக்காசு
முருகு

முறுக்கு
மூக்குத்தி
மெட்டி
மேகலை
மோகனமாலை
மோசை
மோதிரம்
யானைக்குண்டலம்
வங்கி (கேயூரம்)
வட்டக்குவளை
வட்டப்பூமோதிரம்
வடபல்லி
வடம்
வடுகவாளி
வண்டு
வயந்தகம்
வல்லிகை
வலம்புரி
வலம்புரிவளை
வலயம்
வன்னசரம்
வனமாலை
வாகுசுட்டி
வாகுமாலாவலயம்
வாகுவலயம்
வால்வளை
வாளி
விசிறிமுருகு
வியாழகுண்டலம்
விரிசிகை
வீரக்கண்டை
வீரக்கழல்
வீரச்சங்கிலி
வீரசன்னம்
வீரபட்டம்
வீரவளை
வெள்ளித்தழை.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் பழமொழிகளில் அணிகலன்கள்

- பெண்ணுக்குத் தாலிதான் வேலி
- சும்மாவிருந்த அம்மையாருக்குக் காப்பணத்துத்தாலி
- பொற்றாலியோடு அறுசுவைப்போம்
- கட்டுப்பாட்டாலும் கவரிமயிரால் கட்டுப்படவேண்டும்:

  குட்டுப்பட்டாலும் மோதிரக்கையால் குட்டுப்படவேண்டும்
- மனம்போல் மாங்கல்யம்
- கறுப்பிக்கு நகையைப்போட்டு கண்ணாலடி:

  சிவப்பிக்கு நகையைப்போட்டு செருப்பாலடி
- நகையும் நட்டும் நலிந்தோர்க்கில்லை நாளும் கிழமையும் மெலிந்தோர்க்கில்லை
- ஆழிகடப்பினும் கணையாழி பூண்
- தங்கச் செருப்பானாலும் தலைக்கேறாது
- கைம்பெண் வளர்த்த பிள்ளை:மூக்குச்சரடு இல்லாத காளை
- தங்கத்தூள் அகப்பட்டாலும் செங்கற்தூள் அகப்பட்டது
- மின்னுவதெல்லாம் பொன்னல்ல
- தங்கமுடி சூட்டினாலும் தங்கள் குணம் விடார் கயவர்
- தங்கம் புடத்திலே வைத்தாலும் தன்னிறம் மாறாது
- பூசப்பூசப் பொன்னிறம்: தின்னத்தின்ன தன்னிறம்
- கழுத்தில் இருப்பது உருத்திராட்சம்: கையில் இருப்பது கன்னக்கோல்
- ஆணிற்கு இணங்கின பொன்னும் மாமிக்கு இணங்கின பெண்ணும் அருமை



படிப்பகம்

www.padippakam.com

- கடிப்பதற்கு ஓர் எலும்புமில்லை காதில் மினுக்க ஓலையுமில்லை.
- கட்ட கருக மணி இல்லை என்றாலும் பெயர் என்னவோ பொன்னம்மாள்
- கட்டித் தங்கமானாலும் கலீர் என்று ஒலிக்குமா?
- கணக்குப்பிள்ளை பெண்சாதி கம்மல் போட்டாள் என்று காரியக்காரன் பெண்சாதி காதை அறுத்துக்கொண்டாளாம்
- ஒரு முழத்திலே முத்தெடுக்க முடியுமா?
- காதுக்கு இட்டால் முகத்திற்கு அழகு
- தங்கச் சூரிக் கத்தியென்று கழுத்தை அறுத்துக்கொள்ளலாமா?
- தங்கப்பெண்ணே! தூரவே! தட்டான் கண்டால் பொன் என்பான்–தூரசில் வைத்து நிறு என்பான்
- வாரியல் கொண்டைக்குப் பட்டுக்குஞ்சம் கட்டியது போல
- பெண்ணுக்குப் பொன் இட்டுப்பார்: சுவருக்கு மண் இட்டுப்பார்
- கருடன் காலில் உலக்கை கட்டியது போல
- ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும்
- சுடச் சுடரும் பொன்போல
- அறைக் காசுக்குப் போன மனம் ஆயிரம் பொன்கொடுத்தாலும் வராது
- மாமியுடைத்தால் மண்குடம்: மருகியுடைத்தாலும் பொன்குடம்
- போதுமென்ற மனமே பொன் செய்யுமருந்து
- பொன்னின் குடத்திற்குப் பொட்டிட்டாற் போல
- மனதைப்போலிருக்கும் மாங்கலியம்




படிப்பகம்


www.padippakam.com

# அணிகலன்களின் வரைபடங்கள்

## கழுத்தணிகலன்கள்



தாலி வகைகள்
சிகிரியா சுவரோவியங்களிலிருந்து
அநுராதபுரம் (கி.பி. 6ம்நூற்றாண்டு)



தாலியுடன் இணைந்த கழுத்தாபரணங்கள்
பார்வதி வெண்கலச் சிலையிலிருந்து
பொலனறுவை (கி.பி.11 நூற்.)




படிப்பகம்

www.padippakam.com



யாழ்ப்பாணம் ஒல்லாந்தர்காலத் தாலி




தாலிவகைகள்
போர்த்துக்கேயர் – ஒல்லாந்தர் காலம்
யாழ்ப்பாணம்




படிப்பகம்

www.padippakam.com



தாலி வகைகள்
(கிறீஸ்தவப் பெண்களுக்குரியது)
யாழ்ப்பாணம் (நவீன காலம்)




தாலி
(இந்துக்கள் மரபில்)
யாழ்ப்பாணம் (நவீன காலம்)




படிப்பகம்

www.padippakam.com

கழுத்துமாலை ~ மணிமாலை வகைகள்



கார்ணேலியன் மணி மாலைகள் ~ கந்தரோடை
(கி.பி. 1ம் நூற்றாண்டு)
யாழ்ப்பாண அரும்பொருட்காட்சிச்சாலை



மாலைக்கான மணிகள் (Beads)
கந்தரோடை ~ (கி.பி. முதன்மூன்று
நூற்றாண்டுகள்)




படிப்பகம்

www.padippakam.com



அகத்தியர் மணிமாலை
வியாபாரிமூலை
(கி.பி. 14ம் நூற்)



மோறாவளைகள் (Pendents)
சிகிரிய சுவரோவியங்களிலிருந்து (கி.பி)6ம்நூற்



படிப்பகம்

www.padippakam.com

## அட்டியல் வகைகள்



அட்டியல் (Throught Lets)
பார்வதி வெண்கலச் சிலையிலிருந்து
அனுராதபுரம் (கி.பி. 9ம் நூற்)




அட்டியல் (முத்துமணிகளால் ஆனது)
யாழ்ப்பாணம் ~ ஒல்லாந்தர் காலம்



படிப்பகம்

www.padippakam.com




அட்டியல் (Throught Let)
பார்வதி வெண்கலச் சிலையிலிருந்து
பொலநறுவை (கி.பி. 11ம் நூற்.)



படிப்பகம்

www.padippakam.com




**அட்டியல் (Throught Let)**
**யாழ்ப்பாணம் ~ ஒல்லாந்தர் காலம்**



படிப்பகம்

www.padippakam.com




**அட்டியல் (Throught Let)**
**யாழ்ப்பாணம் ~ ஒல்லாந்தர் காலம்**



படிப்பகம்

www.padippakam.com




அட்டியலும் பதக்கமும்




படிப்பகம்

www.padippakam.com

(பாரம்பரியமுறையில்)
யாழ்ப்பாணம்






அட்டியலும் பதக்கமும்
யாழ்ப்பாணம் ~ நவீன காலம்



படிப்பகம்

www.padippakam.com




மார்புப் பதக்கம்
யாழ்ப்பாணம் ~ நவீன காலம்



படிப்பகம்

www.padippakam.com




அட்டியல் ~ நவீனகாலம்
யாழ்ப்பாணம்



படிப்பகம்

www.padippakam.com

# தலையணிகலன்கள்




உச்சிவரி, உச்சிப்பிறை, மயிர்மாட்டி, சந்திர-சூரியபிறை, றாக்கொடி



படிப்பகம்

www.padippakam.com




கந்தரோடையிற் கிடைத்த
தலைக்குடுமி ஊசிகள் (செம்பு)
(Hair pins)
(B.C. 1st Century)



படிப்பகம்

www.padippakam.com

## காதணிகள்



புராதன காதணி வகைகள்
(இந்து சிற்பங்களில் இருந்து மகரகுண்டலம்,
நாககுண்டலம் சிம்ம குண்டலம் முதலியன



படிப்பகம்

www.padippakam.com




**தங்கக் காதணி (Ear Ring)**
**சிகிரியாவில் கிடைத்தது**
**(கி.பி. 6ம் நூற்.)**



படிப்பகம்

www.padippakam.com




காதணி வகைகள் (Ear Loops)
சிகிரிய சுவரோவியங்களிலிருந்து
(கி.பி. 6ம் நூற்)




படிப்பகம்

www.padippakam.com



காதணிகள்
யாழ்ப்பாணம் ~ ஒல்லாந்தர் காலம்




காதணிகள்
யாழ்ப்பாணம் ~ நவீன காலம்



படிப்பகம்

www.padippakam.com

## கையணிகள்




கை வளையல்கள்
சிகிரிய சுவரோவங்களிலிருந்து
(கி.பி. 6 நூற்.)





படிப்பகம்

www.padippakam.com



பூட்டுக்காப்புக்கள்
யாழ்ப்பாணம் : ஒல்லாந்தர் காலம்





கேயூரங்கள் (Armlets)
பார்வதி வெண்கலச் சிலையிலிருந்து



படிப்பகம்


www.padippakam.com

பொலநறுவை,(கி.பி. 11ம் நூற்)



கேயூரம் (Armlet)
பார்வதி வெண்கலச் சிலையிலிருந்து
பொலநறுவை(கி.பி. 11ம் நூற்.)





புராதன கணையாழி
A- கந்தரோடை (B.C.1st C.)
B- பண்டாரக்குளம் : நல்லூர்(மத்தியகாலம்)
(இராசமோதிரம்)



படிப்பகம்

www.padippakam.com





கணையாழி (மோதிரம்)
யாழ்ப்பாணம்: நவீனகாலம்



படிப்பகம்

www.padippakam.com

## மார்பணிகலன்கள்



மார்புநூல் (Bracelet)
சிகிரிய சுவரோவம் (கி.பி.6ம் நூற்.)



படிப்பகம்

www.padippakam.com

# இடுப்பணிகலன்கள்.




ஒட்டியாணங்கள், இடுப்புச்சங்கிலிகள்



படிப்பகம்

www.padippakam.com




அரைஞாண்கொடி அரைமுடிச்சலங்கை




படிப்பகம்

www.padippakam.com

# தலைக் குஞ்சங்கள்








படிப்பகம்

www.padippakam.com

## காலணிகலன்கள்




பாதச்சிலம்பு–வெள்ளி
வியாபாரிமூலை: (18ம் நூற்.)



படிப்பகம்

www.padippakam.com



காற்சதங்கை~ வெள்ளிப் பாதசரம்
யாழ்ப்பாணம் : நவீனகாலம்



படிப்பகம்

www.padippakam.com



வேலணை ~ நாரந்தனையில் கிடைத்த
தங்கத் தகட்டில் பொறிக்கப்பட்ட லக்ஷ்மியின் பதக்கம்
யாழ்ப்பாண அரும்பொருளகம் (சோழர்காலம்)



படிப்பகம்

www.padippakam.com




**பதக்கத்தில் அணிகலன்கள் அணிந்த அனுமான்**
**கந்தரோடை ~ மத்தியகாலம்**
**வெண்கலப்பதக்கம்**



படிப்பகம்

www.padippakam.com




சிவநடராசர் வெண்கலச் சிலையில் புலிமுக இடைவந்தி,
மேகலாபரணம் முதலியன.
பொலநறுவை (கி.பி. 11ம் நூற்.)



படிப்பகம்

www.padippakam.com



**பார்வதி வெண்கலச் சிலையில் சிங்கமுக ஒட்டியாணம், காற்சதங்கை, மேகலாபரணம் முதலியன. பொலநறுவை (கி.பி. 11ம் நூற்)**



படிப்பகம்

www.padippakam.com



**இந்துநதிப்பள்ளத்தாக்கு நங்கையரின் அணிகலன்களினூடான தோற்றம் (கி.மு. 3700 – கி.மு. 1760)**



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்





Cover Designed and printed by **Kaarthigeyan** (Pvt) Ltd. 501/2, Galle Road, Colombo-6 Tel: 595875

www.padippakam.com
படிப்பகம்